
Book 15

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்

# பிறைக் குழப்பம்

## ஹதீஸ்கள் குழப்பத்தை உண்டாக்குகின்றன
## ஆனால்
## குர்ஆன் தீர்வை அறிவிக்கின்றது



நவம்பர்
2000
NOVEMBER

PUTHIYA NINAIVOOTAL
TAMIL MONTHLY

## எளிய உண்மைகள்

**இறுதி இறைவேதமான அல்குர்ஆன் உலகின் வேறு எந்தப் புத்தகத்திலும் காணப்படாத, தனித்தன்மையான, அற்புதமான அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள ஒவ்வொரு விஷயமும் 19 என்ற எண்ணின் அடிப்படையில் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது. இது, இறைவன் குர்ஆனில் 74:23-31வசனங்களில் கூறுவது போல இக்கட்டமைப்பு குர்ஆன் மனிதர்களின் சொல் அல்ல என்று நிரூபிப்பதாகவும், நம்பிக்கையாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதாகவும், நயவஞ்சகர்களை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளதை அறிவுடையோர்கள் கண்கூடாகக் கண்டு கொள்ளலாம்.. 74:35ல் இறைவன் கூறுவதைப் போல் இது ஒரு மிகப்பெரியஅற்புதமாகவும் அமைந்திருப்பதை அறிந்து அதிசயிக்கலாம், மேலும் இக்கட்டமைப்பு அல்குர்ஆனின் ஒவ்வொரு எண்ணையும் எழுத்தையும் பாதுகாக்கும் வேலையை தொடர்ந்து செய்யக் கூடியதாகவும் உள்ளதை அறிந்து வியக்கலாம் .**

1. குர் ஆனின் முதல் வசனமான பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பதில் இடம் பெறும் அரபி எழுத்துக்கள் ........................................................................ 19
2. குர்ஆன் 114 சூராக்களை கொண்டது 114 = ........................................................ 19x6
3. குர் ஆனின் மொத்த வசனங்களின் எண்ணிக்கை 6346 ........................................ 19x334
   (அதில் எண்ணிடப்பட்டது 6234, எண்ணிடப்படாதது 112 (பிஸ் மிக்கள்)
   6234 + 112 = 6346 கவனிக்க 6+3+4+ 6 = ...........................................................19
4. 'பிஸ்மில்லாஹ்' குர் ஆனில் 114 முறை உள்ளது 114 ............................................19X6
   ( சூரா 9ல் பிஸ்மி இல்லாவிட்டாலும் 19 சூராக்கள் தள்ளி 27வது
   சூராவில் இரு முறை உள்ள) சூரா 27 வசனம் 30 ஆக 27+30 = 57.......................... 19x3
5. பிஸ்மில்லாஹ் இல்லாத சூரா 9ற்கும் பிஸ்மில்லாஹ் இருமுறை
   இடம் பெறும் சூரா 27க்கும் இடையில் இடம் பெறும் சூராக்கள்............................19
6. பிஸ்மி இல்லாத சூரா 9 முதல் பிஸ்மி இருமுறை இடம் பெறும்
   சூராவான 27 வரை கூட்டினால் (9+10+11.... 27) வரும் கூட்டுத்தொகை 342 = .....19x18
7. இதில் முக்கிய விஷயம் என்ன வென்றால் இருமுறை பிஸ்மி
   இடம் பெறும் சூராவில் முதல் பிஸ்மிக்கும் இரண்டாம்
   பிஸ்மிக்கும் இடையில் உள்ள வார்த்தைகள் சரியாக அதே 342 = .........................19x18
8. புகழ்பெற்ற முதல் வஹீ (96:1 முதல் 5) யில் இடம் பெறும்
   வார்த்தைகள் சரியாக .................................................................................. 19
9. 19 வார்த்தைகள் கொண்ட அந்த முதல் வஹீயில் இடம் பெறும்
   எழுத்துக்கள் சரியாக 76 ............................................................................ 19x4
10. இறக்கப்பட்ட வரிசையில் முதல் சூராவான 96ல் இடம் பெறும் வசனங்கள் ...........19
11. இந்த சூரா, இடது புறத்திலிருந்து புரட்டினால் வருவது ..............................19வது இடத்தில்
12. 96ம் சூரா முழுதும் இடம்பெறும் எழுத்துக்கள் 304 ............................................. 19x16
13. இறுதி வஹீயான சூரா 110ல் இடம் பெறும் வார்த்தைகளும் சரியாக ................... 19
14. கடைசி வெளிப்பாட்டின் (சூரா 110:1) முதல் வசனத்தில் இருப்பது ........... 19 எழுத்துக்கள்
15. 29 சூராக்களின் ஆரம்பங்களில் வரும் 14 எழுத்துக்கள் கொண்டு அமைக்கப்பட்ட
    14 வகையான முத்திரை எழுத்துக்கள் (உம்) அலிப், லாம், மீம்) இவற்றைக்
    கூட்ட 29+14+14 = 57 = ............................................................................ 19x3
16. முத்திரை எழுத்துக்கள் அமைந்த 29 சூராக்களின் சூரா எண்களைக் கூட்ட
    (2+3+7+ ...... + 50+ 68) = 822 அத்துடன் 14 ஐக் கூட்ட (அதாவது 14 வகைகள்)
    = 822+14 = 836 = ...........................................................................................19x44
17. முத்திரை எழுத்து கொண்ட முதல் சூராவான 2க்கும் முத்திரை
    எழுத்து கொண்ட கடைசி சூராவான 68க்கும் இடையில்
    முத்திரை எழுத்து இல்லாத சூராக்கள் 38 உள்ளன ............................................ 19x2
18. முதல் முத்திரை சூராவிலிருந்து கடைசி முத்திரை சூரா வரை முத்திரையிட்டதும்
    முத்திரையிடாதது மாக மாறி மாறி வருவது ............................................. 19 விதமாக
19. குர்ஆனில் 30 எண்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை 1, 2, 3,
    4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19, 20, 30, 40, 50, 60, 70,
    80, 99, 100, 200, 300, 1000, 2,000, 3,000, 5,000,
    50,000 & 1,00,000 இந்த எண்க ளின் கூட்டுத் தொகை 1,62,146 ......................... 19x8534

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி

செய்தி 1

நவம்பர் 2000
நினைவு 10

குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

ஆசிரியர் :
C.S. ரஃபியுத்தீன்

துணை ஆசிரியர் :
N.A. அஹமது ஹுஸைன்

தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்

## இதழின் உள்ளே

★ ரமலானும் ஹதீஸைக் கண்டுபிடித்தவர்களும்

★ அற்புதங்களை மிகைத்த அற்புதம்

★ ஓர் ஆதரபூர்வமான ஹதீஸ்

★ குர்ஆனை கொண்டு வழிகெடுவது யார்?

★ 2:189 வசனத்திற்க்கு அர்த்தம் அனர்த்தம்

★ இறைவனின் முத்திரை 19

★ நேருக்கு நேர்

# ரமலானும் ஹதீஸைக் கண்டுபிடித்தவர்களின்
# மூடத்தனமும்!

சன்னி பிரிவினரைச் சேர்ந்த அரபிகளால் வெளியிடப்படும் Iqra Annual என்ற பெயர் கொண்ட இதழின் 1989 ரமலான் இதழில் இறைவனுக்கும் அவருடைய தூதருக்கும் எதிராக போர்ப் பிரகடனம் செய்துள்ளனர். அதில் அவர்கள் கூறுகின்றனர். "இந்த இதழின் பெரும்பகுதியை 'ஒற்றுமை' என்ற தலைப்பின் கீழ் தந்துள்ளோம். எல்லாவிதமான தீமை, அநீதி, அடக்குமுறை மற்றும் நயவஞ்சகத்திற்கெதிரான சமுதாய ஒற்றுமை; மேலும் ரஷாத் கலீஃபா போன்ற போலித் தூதர்கள் அனைவரையும் மறுப்பதில் ஒற்றுமை"..........இன்னும் கட்டுரை தொடர்ந்து செல்கின்றது.

அந்த அரபி இதழின் பக்கங்களை நாம் புரட்டினால் அரபிகளைப் பற்றிய ஏராளமான தகவல்களை நாம் அறிந்து கொள்ளலாம். அவற்றில் 'நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்' என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள இரண்டு பத்திகளை நாம் கீழே தந்திருக்கின்றோம்.

1. "அரபு தேசத்தைச் சேர்ந்த கடல் மாலுமிகளும் ஆராய்ச்சி யாளர்களும் கடலைப் பற்றியும் சமுத்திரங்களைப் பற்றியும் மிகவும் விரிந்த அறிவைப் பெற்றிருந்தனர். சமுத்திரங்கள் ஒன்று மற்றொன்றுடன் இணைந்து உள்ளது என்பது அவர்களுடைய மகத்தான கண்டுபிடிப்புகளில் ஒன்றாகும். (அவர்களுக்கு இது மிகவும் வியப்பூட்டும் கண்டுபிடிப்புப் போலும்)

2. அமெரிக்காவைக் கண்டுபிடித்தது அரேபியர்கள்தான் என்பதை நவீன ஆராய்ச்சிகள் எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி நிரூபிக்கின்றன. இவ்விஷயம் குறித்த சமீபத்திய ஆராய்ச்சிகள் ஒரு படிமேலே சென்று கொலம்பஸுக்கு ஐந்து

நூற்றாண்டுகளுக்கு முன்னரே அரேபியர்கள் அமெரிக்காவைக் கண்டுபிடித்து விட்டனர் என்று கூறுகின்றன.

அதே இதழின் மற்றொரு பக்கத்தில் அரேபியர்க மிகச் சமீபத்திய விண்வெளியியல் கண்டுபிடிப்பு ஒன்று காணப்படுகின்றது. அதனை நாம் கீழே தந்திருக்கின்றோம்.

"இன்ஷா அல்லாஹ் இவ்வருடத்திய ரமலான், ஏப்ரல் 6 அல்லது 7 அல்லது 8 தேதிகளில் துவங்கக்கூடும் இவற்றில் எது என்பதைப் பிறை பார்ப்பதை வைத்து முடிவு செய்யப்படும்."

ஹதீஸ் மற்றும் சுன்னா ஆகியவற்றைத் தங்களுடைய முதல் கண்டுபிடிப்பாகக் கொண்ட மக்களின் மகத்தான கண்டுபிடிப்பு இதுவேயாகும்.

முழு சூரியக்குடும்பத்தின் உறுப்பினர்களான சூரியன், சந்திரன், செவ்வாய், வியாழன், வெள்ளி, ஆகியவற்றின் உதய, அஸ்தமன நேரங்களை அறிந்து கொள்ள அவர்கள் நாளிதழ்களைப் பார்த்திருந்தால் போதுமானது. இத்தகையவர்கள் அறிவின் அடிப்படையிலான ரஷாதின் செய்தியை மறுத்ததில் எந்த வித வியப்புமில்லை.ஏற்றுக்கொண்டால் தான் அது வியப்பாகும்!

சூரியனையும் சந்திரனையும் காலத்தைக் கணிப்பதற்காகப் படைத்ததாகக் கூறும் இறைவன் அவற்றைக் கண்களால் கண்டுதான் கணக்கிட வேண்டும் என்ற நிபந்தனையை விதிக்கவில்லை. வேறு எந்த கணக்கிடும் முறையையும் பயன்படுத்தத் தடை விதிக்கவில்லை. அறியாமைக் காலத்தைச் சேர்ந்த சில மனிதர்கள் விதித்த நிபந்தனையே அது. இன்றைய விஞ்ஞான வளர்ச்சியடைந்த காலகட்டத்தில் விண்வெளியின் நிகழ்வுகளான சூரியோதயம், சந்திரோதயம் ஆகியவற்றை மிகத் துல்லியமாகக் கணக்கிடும் வழிமுறைகளை மனிதர்களுக்கு இறைவன் வழங்கி இருக்கிறார்.

அறியாமைக் கால நடை முறைகளைப் பின்பற்றும் பாரம்பர்ய முஸ்லிம்கள் ஒவ்வொரு வருடமும் போலவே இவ்வருடமும், ரமலானின் முதல் நாள் எது முடிவுநாள் எது என்பதில் குழப்பம் அடையப் போகிறார்கள் என்பது உறுதி. நாம் அத்தகைய குழப்பம் எதுவும் இல்லாமல் ரமலானின் துவக்கத்தையும் முடிவையும் முன்னரே அறிந்து

**ரமலானின் புதுப்பிறைக்கான**

**அமாவாசை (New Moon)**

**26-11-2000 நவம்பர் 26 ஞாயிறு**

**அன்று காலை 4:43.. அன்று நிகழ்கிறது. எனவே**

**இந்தியாவில் ரமலான் முதல் நோன்பு**

**27-11-2000 அன்று அதிகாலை துவங்கி ரமலான்**

**இறுதி நோன்பு 26-12-2000**

**அன்று மாலையுடன் முடியும்.**

**ஏனெனில் ஷவ்வால் புதுப்பிறைக்கான**

**அமாவாசை 25-12-2000 திங்கள்**

**இரவு 10:54க்கு நிகழ்கிறது.**

ரமலானை எதிர்பார்த்திருக்கலாம். இறைவன் நாட்டப்படி இவ்வருட ரமலானின் புதுப்பிறைக்கான அமாவாசை (New Moon) 26-11-2000 நவம்பர் 26 ஞாயிறு அன்று காலை 4:43.. அன்று நிகழ்கிறது.

எனவே இந்தியாவில் ரமலான் முதல் நோன்பு 27-11-2000அன்று அதிகாலை துவங்கி ரமலான் இறுதி நோன்பு 26-12-2000 அன்று மாலையுடன் முடியும்.

ஏனெனில் ஷவ்வால் புதுப்பிறைக்கான அமாவாசை 25-12-2000 திங்கள் இரவு 10:54க்கு, நிகழ்கிறது.

இந்த நேரான வழியை நமக்குக் காட்டியதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஒரு வாய்ப்பாகவே இறைவன் நோன்பை நமக்கு விதித்திருக்கின்றார். இதன் மூலம் இறை அச்சம் என்னும் மீட்சியை நாம் அடைய முடியும் என்று நமக்கு வாக்களிக்கிறார். (2:183-185). எனவே இறைச் சட்டங்களைப் பேணி, வருகின்ற ரமலானை நம் மீட்சிக்காகப் பயன்படுத்திக் கொள்வோம். இன்ஷா அல்லாஹ்.

# அரபி எழுத்துக்களின் எண்மதிப்புகளில்

# 19 ன் அற்புதக் கட்டமைப்பு

அரபி மொழியின் அரிச்சுவடியில் 28 எழுத்துக்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றுக்கும் உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எண் மதிப்புக்களும் உள்ளன. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்ட வணையில் 28 அரபி எழுத்துக்களும் அவற்றின் எண் மதிப்புகளும் காட்டப்பட்டுள்ளன. சகோதரர் அஸ்ஹர் கான் 28 அரபி எழுத்துக்களின் எண்மதிப்பையும் அருகருகே எழுதி கீழே கொடுக்கப்பட்டுள்ள நீண்ட எண்ணை அமைத்து அதை 19ஐக் கொண்டு வகுக்கும்படி தன் கணிப்பொறிக்குக் (Computer) கட்டளையிட்டார். நிச்சயமாக, அந்த நீண்ட எண் 19 ஆல் வகுப்படக்கூடியதே என்று கணிப்பொறி தெளிவு படுத்தியது. இதன் மூலம் 19 என்ற அற்புதக் கணிதக் கட்டமைப்பை உறுதி செய்யும் விதத்தில் இறைவன் அரபி மொழியைப் படைத்து வடிவமைத்திருக்கிறார் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

## ஏன் 19 ?

ஏராளமான மக்கள் இன்னும் இந்த அடிப்படையான ஆரம்பக் கேள்வியை கேட்டுக் கொண்டிருக்கின்றனர். நாம், அவர்களிடம் ஒன்று என்பதைக் குறிக்கும் 'வாஹித்' என்ற அரபிப் பதத்தின் எண் மதிப்பு 19 என்று கூறினால் அவர்கள் இந்த எண் மதிப்புக்களுக்கு என்ன ஆதாரம் என்றும் அதை நாம் உறுதிப்படுத்திக் கொள்வது எப்படி என்றும் கேட்கின்றனர்.

இப்போது நாம் அதற்கான ஆதாரம், எண்மதிப்புக்களை உறுதிப் படுத்துவதற்கான நிரூபணம் கிடைக்கப் பெற்றுள்ளோம்!

உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள அரபி எழுத்துக்களுக்கான எண் மதிப்புக்கள்

அப்ஜத் வரிசையில் எண் மதிப்பு

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Arabic : | ا | ب | ج | د | ه | و | ز | ح | ط | ى | ك | ل | م | ن |
| English : | A | B | G | D | H | W | Z | HH | TT | Y | K | L | M | N |
| Value : | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 20 | 30 | 40 | 50 |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Arabic : | س | ع | ف | ص | ق | ر | ش | ت | ث | خ | ذ | ض | ظ | غ |
| English : | S | A | F | SS | Q | R | Sh | T | Th | Kh | Dh | DD | ZZ | Gh |
| Value : | 60 | 70 | 80 | 90 | 100 | 200 | 300 | 400 | 500 | 600 | 700 | 800 | 900 | 1000 |

இதோ அந்த நீண்ட எண்

12345678910203040506070809010020030040050060070080090001000.

அரபி எழுத்துக்களின் எண் மதிப்பை அருகருகே அமைத்தால் கிடைக்கும் எண் 19ன் பெருக்குத் தொகையே அனைத்தையும் படைத்து வடிவமைத்த இறைவனுக்கே எல்லாப் புகழும்!

# அற்புதங்களை

# மிகைத்த அற்புதம்!

உலகத்தை அதிரச் செய்யும் இந்த அற்புதக் கணிதக் கட்டமைப்பு நிச்சயம் உலகை பணியச் செய்யும். எல்லாம் வல்ல இறைவன் (அல்குர்ஆன் 26:4) முன் அடிபணியச் செய்யும். இதன் பின்னரும் எவ்ரேனும் 19ன் கணிதக் கட்டமைப்பை ஏற்றுக் கொள்ள மறுத்தால் நிச்சயமாக அவர்களுக்கு நரகத்தின் கீழ்தட்டுக்களில் ஒரு நிரந்தரமான இடம் முன் பதிவு செய்யப்படும்.

குர்ஆனின் முதல் அத்தியாயமான (அல்ஃபாத்திஹா) திறவுகோல் அல்லது சாவி இறைவனுடன் நம் தொடர்பை உறுதிப்படுத்திக் கொள்ள இறைவன் நமக்களித்த மாபெரும் பரிசு ஆகும்.

1. அதன் அத்தியாய எண்ணான ஒன்றையும் அதில் இடம் பெறும் வசனங்களின் எண்ணான 7ஐயும் அருகருகே எழுதினால் உங்களுக்குக் கிடைக்கும் எண்ணான 17 ஒரு

முழுநாளுக்குரிய ஐவேளைத் தொடர்புத் தொழுகையின் ரக்அத்களின் (பகுதிகளின்) எண்ணிக்கையாகும்!

நாம் திறவு கோல் அத்தியாய எண்ணை எழுதி அதற்கு அருகருகே அதில் இடம் பெறும் வசனங்களின் எண்களையும் எழுதியானல் நமக்குக் கிட்டும் எண்:

11234567

இந்த எண் 19ன் பெருக்குத் தொகை ஆகும்!

அத்தியாயம் 1ன் (திறவுகோல்) பண்புகள்

| வசன எண் | எழுத்துக்கள் | எண்மதிப்பு (அப்ஜத்) |
|---|---|---|
| 1 | 19 | 786 |
| 2 | 17 | 581 |
| 3 | 12 | 618 |
| 4 | 11 | 241 |
| 5 | 19 | 836 |
| 6 | 18 | 1072 |
| 7 | 43 | 6009 |

இப்போது நாம் அத்தியாய எண்ணையும் அதைத் தொடர்ந்து அதன் வசனங்களில் இடம் பெறும் எழுத்துக்களின்

எண்ணிக் கைகளையும் எழுதினால் நமக்குக் கிட்டும் எண்:

119171211191843

இவ்வெண்ணும் 19ன் பெருக்குத் தொகையே!

4. ஒரு வாதத்திற்காக, மேற்கண்ட அடிப்படையில் யாரேனும் எழுத்துக்களை மாற்றிவிட்டு அதே அளவு எழுத்துக்களை எழுதி விட்டாலும் இந்த எண் நமக்குக் கிடைக்குமே என்று கூறலாம். ஆயினும் கீழ்கண்ட அமைப்பு அதற்கான சாத்தியக் கூறையும் இல்லாமல் ஆக்குகின்றது. ஏனெனில் இங்கே ஒவ்வொரு எழுத்தின் எண்மதிப்பும் கணக்கில் கொள்ளப்படுகிறது!

இதோ அந்த எண்:

இங்கே முதலில் அத்தியாய எண்ணை எழுதி தொடர்ந்து ஒவ்வொரு வசனத்திலும் இடம்பெறும் எழுத்துக்களின் எண்களை எழுதி, அதைத் தொடர்ந்து வசனங்களில் இடம்பெறும் எழுத்துக்களின் எண் மதிப்பை எழுதுகிறோம்.

11978617581126181124119836181072 4 36009.

இந்த எண்ணும் 19ன் பெருக்குத் தொகையே!

5. இப்போது நாம் முதலில் அத்தியாய எண்ணை எழுதி, அதைத் தொடர்ந்து வசன எண்களை எழுதி அதன் வசனங்களில் இடம்பெறும் எழுத்துக்களின் எண்ணிக்கையை எழுதி அதன் பின்னர் ஒவ்வொரு வசனத்திலும் இடம்பெறும் எழுத்துக்களின் எண் மதிப்பை எழுதினால் இந்த எண் நமக்குக் கிடைக்கும்.

1119786217581312618411 2
415198 3661810727436009.

இவ்வெண்ணும் 19ன் பெருக்குத் தொகையாகும்!

6. இப்போது, ஒவ்வொரு வசனத்தில் இடம்பெறும் எழுத்துக்களின் மொத்த எண் மதிப்பை எழுதுவதற்குப் பதிலாக நாம் ஒவ்வொரு எழுத்தின் தனித்தனியான எண்மதிப்பை எழுதினால் நமக்குக் கிடைக்கும் 274 இலக்கங்கள் கொண்ட அந்த நீண்ட எண் 19ன் பெருக்குத் தொகையே! அதாவது இந்த எண் அத்தியாய எண்ணை எழுதுவதில் துவங்கி தொடர்ந்து அவ்வத்தியாயத்தில் இடம்பெறும் வசன எண்ணை எழுதி தொடர்ந்து அவ்வசனத்தில் இடம்பெறும் எழுத்துக்களின் எண்ணிக்கைகளை எழுதி, தொடர்ந்து - அவ்வசனத்தில் இடம்பெறும் ஒவ்வொரு எழுத்தின் தனித்தனியான எண் மதிப்பை எழுதி இவ்விதம் தொடர்ந்து ஏழு வசனங்களுக்கும் எழுதிப்பூர்த்தி செய்தால் அதன் கடைசி எண் (கடைசி எழுத்தான நூன் (ன்) என்ற எழுத்தின் எண் மதிப்பு) 50 ஆக இருக்கும்.

அந்த எண்

17119260401303051 3
0200 84050130
-20081040217 ...... எனத் துவங்கி .......50 என்ற எண்ணுடன் முடிவடையும். அந்த எண் 274 இலக்கங்கள் கொண்டதாக இருக்கும்!

7. நம்மால் இங்கே மிக நீண்ட எண்களைக் குறிப்பிடமுடியாது என்பதனால் மேற்கண்ட நீண்ட எண்ணிக்கை குறிப்பிட (*) என்ற இக்குறியைப் பிரதியாய் பயன் படுத்துவோம். அந்த நீண்ட எண்ணில் வசன எண்கள் தொடர்ந்து அதில் இடம் பெறும் எழுத்துக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதில் இடம் பெறும் ஒவ்வொரு எழுத்தின் தனித்தனியான எண்மதிப்பு ஆகியவை இருக்கும்.

நாம் அத்தியாய எண்ணான 1ஐயும் வசனங்களின் எண்ணான 7ஐயும் அருகருகே எழுதினால் கிடைக்கும் 17 (ஐவேளைத் தொழுகையின் பகுதிகள்) ல் துவங்கி தொடர்ந்து முதல்

தொழுகையின் வரிசை எண்ணை எழுதி தொடர்ந்து அத்தொழுகையின் பகுதிகளின் (ரக்அத்களின்) எண்ணிக்கையான 2ஐ எழுதி, தொடர்ந்து (இருமுறை 'திறவுகோல்' ஓதப்படவேண்டும் என்பதால் (*) (*) என்பதை எழுதி தொடர்ந்து இரண்டாம் தொழுகையின் வரிசை எண்ணை எழுதி, தொடர்ந்து அதில் இடம் பெறும் பகுதிகளின் எண்ணான நான்கை எழுதி, அதனைத் தொடர்ந்து நான்கு (*) குறிகளை எழுதி இவ்விதம் தொடர்ந்து ஐந்து வேளைத் தொழுகைக்கும் செய்தால் நமக்குக் கிடைக்கும் மிக நீண்ட எண் 19ன் பெருக்குத் தொகை என்பது மட்டுமல்ல அந்நீண்ட எண்ணின் இலக்கங்களின் எண்ணிக்கையான 4636 என்பதும் 19ன் பெருக்குத் தொகையே! மேலும் 4+6+3+6=19. கடவுள் மகாப் பெரியவர் எல்லா வல்லமைகளும் கொண்டவர்.

அந்த எண்

1712 (*)(*)24 (*) (*) (*)(*)34(*) (*) (*) (* )43 (*) (* ) (* ) 54(*) (*) (*) (*) = 19X....

8. அது மட்டுமல்ல ஒவ்வொரு தொழுகையின் பகுதி எண்களை எழுதி தொடர்ந்து அதே எண்ணிக்கையில் (*) குறிகளை எழுதினாலும் கிடைக்கும் எண் 19ன் பெருக்குத் தொகைதான், அதாவது

2(*)(*)4(*)(*)(*)(*)3(*) (*) (*)4(*)(*)(*)(*)4(*)(*)(*)(*)

இந்த எண்ணும் 19ன் பெருக்குத் தொகையே!

இப்போது நாம் (அல்ஃபாத்திஹா) 'திறவுகோல்' அத்தியாயத்தில் இறைவனால் அமைக்கப்பட்டுள்ள மகத்தான சக்தியை அறிந்து வியக்கலாம்! இறைவனுக்கு நன்றி சொல்லலாம்!

இது ஒரு சிறிய அத்தியாயத்தைப் பற்றிய அற்புதக் தகவல்கள் மட்டுமே என்பதால் நாமே இவற்றில் பெரும்பகுதியை இலகுவாகச் சரிபார்த்துக் கொள்ள முடியும். நீண்ட எண்களை (கம்ப்யூட்டர்) கணிணிகள் 19ன் பெருக்குத் தொகைதான் என்று உறதிப்படுத்துகின்றன.

இனியும் எளிமையான, சக்திவாய்ந்த, பூரணமான இம்மாபெரும் அற்புதத்தை மறுப்பதில் நிராகரிப்போரும், நயவஞ்சகர்களும் எவ்வளவு தூரம் செல்லப் போகிறார்கள் என்பதைப் பார்ப்போம்!

(ரஷாத் ஆசிரியராக இருந்த 'Submitters Perspective'என்ற சிற்றதழின் ஜனவரி 1990 இதழிலிருந்து மொழிபெயர்க் கப்பட்டது)

# குர்ஆனைக் கொண்டு வழிகெடுவது யார்?

## சுயமாக சிந்திக்க முயன்றால் வழிகெட்டுவிடுவோமா?

அல்குர்ஆன் மட்டுமே இறைவனின் வார்த்தைகள். அதுமட்டுமே மார்க்க ஆதாரமாகப் பின்பற்றப்பட வேண்டும் என்ற சத்தியம் மக்களிடம் சென்று சேரும்போது பாமர மக்களை சிந்தனையில்லா ஆட்டு மந்தைகளாக்கி தங்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்து ஆட்டுவிக்கும் ஆலிம்கள் என்று அழைக்கப்படும் இஸ்லாமிய அறிஞர்கள், தங்கள் அடியார்களை தொடர்ந்து தம் கட்டுப்பட்டுக்குள் வைத்திருக்க அவர்களைப் பயமுறுத்தியே தங்கள் எண்ணங்களைச் சாதித்துக் கொள்கிறார்கள். இவர்களுடைய இத்தகைய நடவடிக்கைகள் குர்ஆனும் நமக்கு விவரிக்கின்றது (39:36)

இவர்களுடைய இத்தகைய பயமுறுத்தும் (பூச்சாண்டி) நடவடிக்கைகளுள் 'குர்ஆனைக் கொண்டு நேர்வழியும் அடையலாம், அதைக் கொண்டே வழிகேட்டிலும் சென்று விடலாம் என்று குர்ஆன் கூறுகிறது. எனவே அறிஞர்களைக் கண்மூடிப் பின்பற்றுவதுதான் நேர்வழி நாம் சுயமாகச் சிந்திக்க முயன்றால் குர்ஆன் புரியாது, வழிகெட்டு விடுவோம். குர்ஆனை மட்டும் பின்பற்றினால் நிச்சயம் வழிகேடுதான், என்ற பிரச்சாரமும் ஒன்று. குர்ஆனை ஒருமுறை கூட முழுமையாகப் படிக்காதவர்களைத்தான் இத்தகைய அச்சுறுத்தல் செய்ய முடியும்! இவர்களுடைய இப்பிரச்சாரத்தை நாம் குர்ஆனைக் கொண்டே முறியடிப்போம்.

### குர்ஆன் தீயவர்களைத்தவிர வேறு யாரையும் வழிதவறச் செய்யாது!

முதலில் அவர்கள் சுட்டிக்காட்டும் வசனத்தை நாம் முழுமையாக படிப்போம்.

மிகச்சிறய கொசுவோ அல்லது அதை விடப் பெரிதோ எந்த உதாரணத்தையும் கூறுவதற்கு இறைவன் வெட்கப்படமாட்டார்.

நம்பிக்கை கொண்டோரைப் பொறுத்தவரை அது தங்கள் இரட்சகரிடமிருந்து வந்த சத்தியம் என்பதை அறிவார்கள். நம்ப மறுப்போரைப் பொறுத்த வரையில் அவர்கள் கூறுவர், "இறைவன் இவ்வுதாரணத்தின் மூலம் என்ன கூற நாடுகிறார்?" அவர் பலரை இதன் மூலம் வழிதவறச் செய்கிறார். பலரை இதன்மூலம் நேர்வழியில் செலுத்துகிறார். ஆனால் அவர் தீயவர்களைத் தவிர வேறு யாரையும் இதன் மூலம் வழி தவறச் செய்வதில்லை : (2:26)

இறைவன் தெளிவான இவ்வசனத்தில் நமக்கச் சிறிதோ அல்லது பெரிதோ எந்த உதாரணத்தையும் கூற அவர் வெட்கப்படுவதில்லை என்றும், நம்பிக்கை கொண்டோரைப் பொறுத்தவரை அவ்வுதாரணங்கள் தங்கள் இரட்சகரிடம் இருந்து வந்துள்ள சத்தியம் என்பதை நன்கு அறிந்திருப்பார்கள் என்றும் கூறுகிறார். ஆனால் நம்ப மறுப்போருக்கோ அதன் மூலம் இறைவன் என்ன கூறுகிறார் என்பதை விளங்கிக் கொள்ள முடியாமல் போகிறார்கள் என்றும் கூறுகிறார். அதாவது நம்பிக்கையாளர்கள் குர்ஆனை, குர்ஆனில் கூறப்படும் உதாரணங்களை நன்கு விளங்கிக் கொள்வார்கள் அதே சமயம் கடவுள் மேல் நம்பிக்கையற்றோரால் குர்ஆனின் உதாரணங்களை, புரிந்து கொள்ள முடியாமல் போகும்!

## <u>உள்ளத்தூய்மை உடையோரால் மட்டுமே குர்ஆனைப் புரிந்து கொள்ள முடியும்.</u>

இங்கே நம்பிக்கையாளர்களுக்கும் நிராகரிக்கும் நயவஞ்சகர்களுக்கும் உள்ள வேறுபாடு கூறுப்படுகிறது. முதல் வகையினருக்குக் குர்ஆன் நன்கு புரியும் இரண்டாம் வகையினருக்கோ அது புரியாமல் போய்விடும்.

குர்ஆன் இலகுவானது. தெளிவானது, விவரிக்கப்பட்டது, முழுமையானது என்று இறைவன் குர்ஆன் முழுவதும் பலமுறைகள் கூறுகின்றார். அவை மிகத் தெளிவான, அடிப்படையான வசனங்களாக உள்ளன. அவற்றில் இருவேறு கருத்துக்கு இடமேயில்லை . இருப்பினும் குர்ஆன் புரிந்து கொள்ள முடியாதது, குழப்பம் தருவது, முழுமையான விபரங்கள் அதில் இல்லை, ஹதீஸ்களுடன் சேர்த்துதான் குர்ஆன் முழுமையானதாகும் என்றெல்லாம் இவர்கள் கூறுகின்றனர் என்றால் அதன் காரணம் என்ன

என்பதை இவ்வசனத்தின் மூலம் நாம் விளங்கிக் கொள்கிறோம். ஆம்! அவர்கள் இறைவனின் வார்த்தைகளில் நம்பிக்கை கொள்ளா தவர்களாக இருக்கின்றனர். எனவே அவர்களுக்குக் குர்ஆன் புரிந்து கொள்ள முடியாத ஒன்றாக உள்ளது.

மறுமையை நம்பாதவர்களும் இறைவனின் அத்தாட்சிகளை, வசனங்களை புறக்கணிப்பவர்களும் குர்ஆனைப் புரிந்து கொள்ள முடியாதபடி தடுத்து விடுவதாக இறைவன் கூறுவதை 17:45, 18:57ல் காண்க. மேலும் அரபி அறிந்தவரோ, அல்லாதவரோ, நம்பிக்கை கொண்டவராக இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு இந்தக் குர்ஆன் நேர்வழி காட்டும் என்றும் கூறுவதை 41:44ல் காண்க. மேலும் உளத்தூய்மையுடை யோரால் மட்டுமே குர்ஆனைப் புரிந்து கொள்ள முடியும் (56:79) என்றும் படிப்பினைகள் பெறுவதற்கு குர்ஆனை இறைவன் இலகுவானதாக்கியுள்ளார் (54:17) என்றும் குர்ஆன் கூறுவதைக் காண்க.

## ஒருமையுடன் இறைவனை வழிபடுவோரை யாராலும் வழி கெடுத்துவிட முடியாது.

தொடர்ந்து, 2:26ன் மூலம் இறைவன் பலரை இந்தக் குர்ஆன் மூலம் நேர்வழியில் செலுத்துவதாகவும் மேலும் பலரை இந்தக் குர்ஆன் மூலம் வழிதவறச் செய்வதாகவும் நாம் அறிந்து கொள்கிறோம்.

அவர் யாரை நேர்வழியில் செலுத்துகிறார் யாரை வழிகேட்டில் செலுத்துகிறார் என்பதை எப்படி நாம் அறிந்து கொள்வது? குர்ஆனுக்கு விளக்கம் குர்ஆன் மட்டுமே என்பதை இப்போது நாம் நன்கறிந்திருக்கின்றோம். எனவே நாம் இக்கேள்விக்கு விடையைக் குர்ஆனிலேயே தேடுவோம்.

இக்கேள்விக்கு விடை தேட நாம் எது நேர்வழியென்று அறிந்து கொள்ள வேண்டும். நேர்வழி யாருக்குக் கிடைக்கும், என விவரிக்கும் வசனங்கள் பல குர்ஆனில் உள்ளன. (4:66-68, 5:16, 6:88, 13:27, 17:9, 33:4, 34:6, 40:28, 46:10-13, 61:8, 62:5, 74:31) ஆயினும் மிகவும் இரத்தினச் சுருக்கமாக இறைவனை அடையும் நேர்வழி எது என்று 3:51ல் நமக்குக் கூறப்படுகின்றது.

“கடவுள்தான் என் இரட்சகரும் உங்கள் இரட்சகருமாவார். அவரை மட்டுமே நீங்கள் வணங்க வேண்டும்.

இதுவே நேரான வழி"

இவ்வசனத்தில் ஒருமையுடன், இறைவனை மட்டும் வணங்குவதே நேரான வழி என்று தெளிவாகக் கூறப்படுகின்றது.

இதனையே சாத்தானும் நம் இரட்சகரின் கண்ணியத்தின் மேல் சத்தியமிட்டுக் கூறுகின்றான்.

"அவன் (சாத்தான்) கூறினான், உம் கண்ணியத்தின் மீது சத்தியமாக! அவர்கள் (மனிதர்கள்) அனைவரையும் மொத்தமாக நான் வழிகெடுத்து விடுவேன் ஒருமையுடன் உம்மை மட்டும் வழிபடும் உம் அடியார்களைத் தவிர.

அவர் (இறைவன்) கூறினார், இதுதான் சத்தியமாகும் சத்தியத்தை மட்டுமே நான் கூறுவேன் (38:82-84)

மேலும் 42:13லும் 13:27லும் தன்னையே முன்னோக்கி அடிபணிந்தோருக்குத் தன்னை அடையும் வழியைக் காட்டுவதாக இறைவன் வாக்களிக்கிறார்.

மேற்கண்ட வசனங்களில் இருந்து இறைவனை ஒருமையுடன் வழிபடும் அடியார்களுக்கு மட்டுமே அவர் நேர்வழியைக் காட்டுகிறார் என்பதை நாம் நன்கறிந்து கொள்கிறோம். கடவுளுக்கு எவ்விதத்திலும் இணை வைக்காமல் கலப்பற்ற ஒருமையுடன் அவரை வழிபடுவோரை யாராலும் வழிகெடுத்து விட முடியாது என்ற உறுதியையும் பெற்றுக் கொள்கிறோம்.

## தீயவர்கள் வழிகேட்டில் விடப்படுவர்! - யார் தீயவர்கள்?

மேலும் தொடர்ந்து 2:26ல் குர்ஆனைக் கொண்டு பலரை வழிகேட்டில் விட்டு விடுவதாகவும் இறைவன் கூறுகிறார். யாரை அவர் வழிகேட்டில் விட்டு விடுகிறார். அவ்வசனத்திலேயே இறைவன் தொடர்ந்து கூறுகிறார். "தீயவர்களைத் தவிர வேறு யாரையும் அவர் இதன் மூலம் வழிகேட்டில் செலுத்த மாட்டார்".

எத்தகைய தீயவர்களை இறைவன் வழிகேட்டில் விட்டு விடுகிறார் என்பதைப் பல குர்ஆன் வசனங்கள் தெளிவு செய்கின்றன. (4:88, 143, 5:108, 13:27, 33, 14:27, 16:93, 30:28-29, 40:34
35, 40:73-75, 41:17-18)

ஆயினும் (ஃபாஸிக்) தீயவர்கள் யார் என்பதையும் மிகச் சுருக்கமான வார்த்தைகளில் இறைவன் விவரிக்கிறார்.

..... இறைவன் இறக்கி வைத்ததைக் (வேதத்தை) கொண்டு எவர்கள் தீர்ப்பளிக்க வில்லையோ

அவர்கள்தான் (ஃபாஸிக்) தீயவர்கள் (4:47, 4:45)

இங்கே இறைவன் இறக்கி வைத்த வேதத்தைக் கொண்டு தீர்ப்பளிக்காமல் மற்ற ஆதாரங்களைக் கொண்டு தீர்ப்பளிப்பவர்கள் தீயவர்களே என்று மிகத் தெளிவான வார்த்தைகளில் இறைவன் அடையாளம் காட்டுகின்றார்.

இன்றைய பாரம்பர்ய முஸ்லிம்கள் அனைவரும் நபியின் பெயரால் இட்டுக்கட்டப்பட்ட பொய்ச் செய்திகளையே தங்களுடைய (ஃபத்வா) தீர்ப்புகளுக்குப் பயன் படுத்துகின்றனர் என்பது நாம் நன்கறிந்த
உண்மை இத்தகையோர்தான் குர்ஆனைக் கொண்டே வழி கேட்டில் செலுத்தப்படுகின்றனர் என்பதை இவ்வசனத்தின் மூலம் நாம் புரிந்து கொள்கிறோம்.

## வழிகேட்டில் உள்ளோம் : முஸ்லிம்கள் ஒப்புக் கொள்ளும் உண்மை

மேலும் இங்கே ஒரு நடைமுறை உண்மையையும் (Fact) கவனிக்க வேண்டும். நேரான பாதையை நோக்கிச் சீரான வழியைக் காட்டும் குர்ஆனைக் கைவசம் வைத்திருந்தும் இன்றைய முஸ்லிம் சமுதாயம் வழிகேட்டில் சிக்கித் தவிப்பதன் காரணம் என்ன? முஸ்லிம்களில் மி க ப் பெ ரு ம் பா ன் மை யி ன ர் வழிகேட்டில் சென்று கொண்டிருக்கின்றனர் என்பது முஸ்லிம்களே ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு மறுக்க முடியாத உண்மை . ஒவ்வொரு பிரிவாரும் தத்தம் பிரிவினரைத் தவிர மற்ற அனைத்துப் பிரிவினரும் வழிகேட்டில் உள்ளதாகவே கூறுவார்கள். அவர்கள் ஒருவரை மற்றவர் வழிகேட்டில் இருப்பதாக குற்றம் சட்டிக் கொள்வார்கள்.

மேலும், பெர்னார்ட் ஷா என்ற அறிஞர் கூறியதாக ஒரு விஷயம் முஸ்லிம்களிடையே மிகப் பிரபலம். அவர் கூறினாராம், 'நான் இஸ்லாத்தைப் பற்றி அறிந்த போது, அதைப் பின்பற்ற ஆர்வம் கொண்டேன். ஆனால் அதை பின்பற்றும் முஸ்லிம்களை பார்த்தவுடன் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டேன்" தங்கள் மார்க்கத்தை உயர்த்திக் கூறுவதால், இவ்விஷயத்தை முஸ்லிமகள் தங்களுக்கிடையில் மிகவும் பெருமையாகப் பேசிக்கொள் வார்கள். ஆனால் இவ்வாறு சொல்வதன் மூலம் தங்கள் சமூகம் வழிகேட்டில் தான் இருக்கிறது என்பதற்கான அவர்களின் ஒப்புதல் வாக்கு மூலமாகவே இது இருப்பதை அவர்கள்

சிந்தித்தார்களோ என்னவோ, நமக்குத் தெரியாது.

## குர்ஆனை மட்டும் பின்பற்றாதுதான் முஸ்லிம்களின் பின்தங்கிய நிலைக்குக் காரணம்!

குர்ஆன் அல்லாத வேறு எந்த ஒன்றும் மார்க்க ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்படாத, பதியப்படாத அந்தக் காலத்தில், முதல் இரு ஹிஜ்ரி (இஸ்லாமிய) ஆண்டுகளில் மட்டுமே முஸ்லிம்கள் பல்வேறு துறைகளிலும் வெகவேகமாக முன்னேறினார்கள் என்பதைச் சரித்திரம் நமக்குக் கூறுகிறது. எப்பொழுது குர்ஆன் அல்லாத மற்றொன்றை மார்க்க ஆதாரமாக அச்சமூகம் ஏற்றுக் கொண்டதோ அப்போது ஆரம்பித்த சீர்கேடுகள் இன்றுவரை தொடர்ந்த கொண்டே, அதிகப்பட்டுக் கொண்டே இருக்கின்றது என்பது கண்கூடான உண்மை . முதல் இரு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் முஹம்மதியர்கள் நாடுகளைப் பிடித்திருக்கலாம்.,எணணிக்கையில் அதிகமானவர்களாக (அதிலும் கிறித்துவர்களுக்கு அடுத்த *படியாகத்தான்) ஆகியிருக்கலாம், ஆனால் சீர்கேடுகளுடனும், குழப்பங்களுடனும், போர்களுடனுமே அது வளர்ந்தது. தொடர்ந்து உலகின் சகல துறைகளிலும் அது வேகமாகப் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனது.

ஏன் இந்த நிலை? ஒளிகாட்டும் வழிகாட்டி, வெற்றிகளை வாக்களித்து அவற்றை அடைவதற்கு வழிகாட்டும் உன்னதத் திருவேதம் அல்குர்ஆன் இவர்களின் கைவசம் இருந்தும் இவர்களுக்கு ஏன் இந்த நிலை? இதற்கான விடையைத்தான் குர்ஆன் வசனங்கள் 4:47ம் 2:26ம் கூறுகின்றன. இறைவன் இறக்கிய அல்குர்ஆனைத் தவிர மற்றவற்றை மார்க்க ஆதாரமாக ஏற்றுக் கொண்ட இவர்கள் ஃபாஸிக்) தீயவர்களே (4:47) தீயவர்கள் குர்ஆனைக் கொண்டே வழிகெடுவார்கள் (2:26) இதுவே குர்ஆனின் தீர்ப்பு.

## தீய வாழ்க்கையை மாற்றிக் கொள்ள விரும்பாத மனிதர்களே உலகில் அதிகம்.

மேலும் 16:93ல் இறைவன் கூறுகின்றார்.

"இறைவன் நாடியிருந்தால் உங்கள் அனைவரையும் ஒரே கூட்டத்தினராக ஆக்கியிருப்பார். ஆயினும், எவர் வழிகேட்டில் செல்ல நாடுகின்றாரோ அவரை, வழிகேட்டிலேயே அவர் விட்டு விடுகிறார், வழிகாட்டப் படவேண்டும் என்று எவர்

விரும்புகிறாரோ அவருக்கு அவர் வழிகாட்டுகிறார். நீங்கள் செய்து கொண்டிருந்த ஒவ்வொன்றைப் பற்றியும் நிச்சயமாக நீங்கள் கேட்கப்படுவீர்கள்."

(இவ்வசனத்தின் தமிழ் மொழிபெயர்ப்புக்களில் இறைவன் தான் நாடியோரை வழிகேட்டில் விட்டு விடுகிறார். தான் நாடியோரை நேர்வழியில் செலுத்துகின்றார் என்றே மொழிபெயர்த்தள்ளனர். இங்கே 'தான் நாடியோரை' என்று அரபி மூலத்தில் இல்லை 'நாடியோரை என்றே உள்ளது (மன்யஷாஅ). கடவுள் நாடியோரை நேர்வழியில் செலுத்துகின்றார். நாடியோரை வழிகேட்டில் விட்டு விடுகின்றார் என்ற கருத்தும் குர்ஆனில் உள்ளது. ஆயினும் இவ்வசனம் அத்தகையதல்ல. அத்தகைய வசனங்களில் இறைவன் மிகத் தெளிவாக 'இறைவன் நாடியோரை' என்றே குறிப்பிடுகிறார் (பார்க்க 14:4, 35:8, 28:56, 2:213) இவ்வ சனம் 'நாடியோரை' என்று மட்டுமே கூறுகிறது. குர்ஆன் வசனங்களில் ஒன்று மற்றொன்றிற்கு விளக்கமே என்ற அடிப்படையில் எவர் நேர்வழியில் செல்ல நாடுகிறாரோ அவரை நேர்வழியில் செலுத்த இறைவன் நாட்டம் கொள்கிறார், எவர் வழிகேட்டை விரும்புகிறாரோ து அவரை வழிகேட்டில் விட்டு விட ப இறைவன் நாடுகிறார் என்று நாம் ர் விளங்கிக் கொள்கின்றோம்)

## <u>உங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதிக்கும் குர்ஆனை அவர்களுக்கு பிடிக்கவில்லை.</u>

எல்லாரும் இறைவனை அடையும் நேர்வழியில் செல்லத்தானே விரும்புவர்? எவரேனும் வழிகேட்டில் செல்ல விரும்புவாரா? என்று சிலருக்குத் தோன்றலாம். தாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் தீய வாழ்வை மாற்றிக் கொள்ள விரும்பாத, நன்மையின் பால் நேர்மையின் பால், சத்தியத்தின் பால், செல்ல விரும்பாத மனிதர்களே உலகில் அதிகம். நேரடியாக நான் வழிகேட்டில் செல்லவே விரும்புகிறேன் என்று எவரும் கூற மாட்டார் என்பதென்னவோ உண்மைதான். ஆயினும் அவர்களுடைய செயல்கள், நடவடிக்கைகள் அவ்வாறு கூறும். 'லாஇலாஹா இல்லல்லாஹ், முஹம்மதர் ரசூலுல்லாஹ்' என்று கூறிவிட்டால் போதும், எத்தகைய பாவம் செய்திருந்தாலும் எப்படி வாழ்ந்திருந்தாலும் முஹம்மத் நபியின் (பரிந்துரை) ஷஃபாஅத் மூலம் சுவனம் நுழைந்து விடலாம் என்று கூறும்

ஹதீஸ்களை நம்பி இன்றைய முஸ்லிம்கள் தங்களைத் திருத்திக் கொள்ள முயற்சிப்பதில்லை. ஒவ்வொருவரும் மனம் கொண்டதே மார்க்கம் என்று தத்தம் மனோ இச்சைப்படி தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்த நம்பிக்கை எந்த அளவுக்கு இச்சமூகத்தில் ஊறிப்போய் உள்ளது என்றால், இன்று குர்ஆன் மட்டுமே மார்க்க ஆதாரம் என்று கூறும் போது அவர்கள் கடுங்கோபம் கொள்கின்றனர். உங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதிக்கும் குர்ஆனை அவர்களுக்குப் பிடிக்கவில்லை. எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்ற வழியைக் காட்டும் ஹதீஸ்களை அவர்களுக்கு மிகவும் பிடித்திருக்கின்றது. ஏனெனில் அவர்கள் தங்களைத் திருத்திக் கொள்வதைப் பற்றி சிந்தித்துப் பார்ப்பதே இல்லை. அது அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு விஷயமாக உள்ளது. அதாவது அவர்களில் பெரும்பாலோர் வழிகேட்டில் செல்வதையே விரும்புகின்றார்கள். இத்தகை யோருக்கு நேர்வழி காட்ட இறைவனும் விரும்பவில்லை என்று நாம்இப்போதுஅறிந்திருக்கின்றோம். எனவே இத்தகையோர் குர்ஆனைத் தங்கள் வசம் வைத்திருந்தாலும் அதனைப் புரிந்து கொண்டு பலனடைய மாட்டார்கள். மாறாக இறைவசனங்களை புரிந்து கொள்ள முடியாமல் துஷ்பிரயோகம் செய்து அதன் மூலமே வழிகேட்டை அடைவார்கள்.

இன்று முஸ்லிம் சமூகத்தில் அனைத்துப் பிரிவுகளும் மற்றவற்றையும் சேர்த்துத்தான் பின்பற்றிக் கொண்டிருக்கின்றன. அவை எவற்றை எல்லாம் சேர்த்துக் கொண்டன என்பதில்தான் அவர்களுக்கிடையே பிரிவுகள், வேறுபாடுகள். மற்றபடி குர்ஆனுடன் மற்ற மனிதர்களின் சொற்களையும் மார்க்க ஆதாரமாகச் சேர்த்துக் கொண்ட விதத்தில் அவர்கள் அனைவரும் ஒன்றுதான்.

## <u>தங்களுடைய பொய்க் கொள்கைகளுக்கேற்ப குர்ஆன் வசனங்களை திரித்துப் பொருள் கூறுவோர்</u>.

அனைத்துப் பிரிவினரும் சிற்சில குர்ஆன் வசனங்களைத் திரித்துப் பொருள் கூறி தங்களுடைய பொய்க் கொள்கைகளுக்கு ஆதாரம் தேடிக் கொள்ள முயற்சிப்பார்கள்.

நல்லடியார்களின் சமாதிகளில் (கபர்) சென்று தங்கள் தேவைகளைப் பிரார்த்திப்பதன் மூலம் இறைவனுக்கு இணைவைப்பவர்கள் 'அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர்களை நீங்கள் இறந்து விட்டவர்கள் என்று கூறாதீர்கள். மாறாக அவர்கள் தங்கள் இரட்சகரிடம் உயிருடன் உள்ளனர் என்ற வசனத்தைக் கூறியே தங்களுடைய சமாதி வழிபாட்டிற்கு நியாயம் கற்பித்துக் கொள்வார்கள். அவர்களுடைய இக்கொள்கைக்கு முரணான மற்றக் குர்ஆன் வசனங்களை எடுத்துக் காட்டினால் அதனை அவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள்.

உங்களில் அதிகாரம் வகிப்போருக்குக் கட்டுப்படுங்கள் என்ற குர்ஆன் வசனத்தைத் திரித்துக் கூறித்தான் மத்ஹப்களை (நான்கு பிரிவுகள்) ஒரு பிரிவினர் மார்க்கமாக்கிக் கொண்டனர்.

இறைவனுக்குக் கட்டுப்படுங்கள் தூதருக்குக் கட்டுப்படுங்கள் என்ற வசனத்தைத் திரித்துக் கூறித்தான் ஹதீஸ்கள் மார்க்கமாக்கப்பட்டன. 33:56ஐத் திரித்துக் கூறித்தான் ஸலவாத்தும் மௌலூதும் உருவாக்கப்பட்டன.

## குர்ஆனைக் கொண்டு வழிகெட்டவர்கள் இன்றைய முஹம்மதியர்கள்தான்

ஆனால் இவை அனைத்தும் கலப்பற்ற ஒருமையுடன் இறைவனை வணங்குவதை விட்டு அவர்களை விலக்கி விட்டன. அதனை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. குர்ஆனின் அடிப்படைச் செய்தியே கலப்பற்ற ஒருமையுடன் நாம் இறைவனை வணங்க வேண்டும் என்பதுதான். அதனை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

இறைவனைக் கலப்பற்ற ஒருமையுடன் வணங்க வழிபட வேண்டும், குர்ஆனை மட்டுமே மார்க்க ஆதாரமாகக் கொள்ள வேண்டும் என்று எடுத்துக் கூறப்பட்டபோதும் அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. எனவே குர்ஆனைக் கொண்டே வழிகெட்டவர்கள் இன்றைய முஹம்மதியர்கள்தான் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை .

இவர்கள் வழிகெட்டதோடு மட்டுமல்லாமல் இவர்களுடைய தவறான நடவடிக்கைகளால் மற்றவர்களையும் வழி கெடுக்கின்றனர். இவர்கள் குர்ஆனை விட்டு விலகி இருப்பதோடு மட்டுமல்லாமல் மற்றவர்களையும் அதை விட்டுத் தடுக்கின்றனர் (6:26

## மார்க்க அறிஞர்களையும், தலைவர்களையும் கண்மூடிப் பின்பற்றுபவர்கள் நஷ்டத்தையே அடைவார்கள்.

மார்க்க அறிஞர்களையும், தலைவர்களையும், கண்மூடிப் பின்பற்றுபவர்கள் நஷ்டத்தையே அடைவார்கள் என்று குர்ஆன் நம்மை எச்சரிக்கின்றது. (9:31, 34:31-33, 40:47 48) நேரான பாதைதான் என்றாலும் கண்ணை மூடிக் கொண்டு நடக்க முடியுமா?

மேலும் சுயமாகச் சிந்திக்க சொல்லி குர்ஆன் நம்மை ஊக்குவிக்கின்றது. சொந்த சிந்தனையில்லாமல் இரவல் சிந்தனைகளைக் கொண்டிருப் பவர்களைக் கண்டிக்கின்றது. சிந்தனை இல்லாதவர்களை ஆடு, மாடு போன்ற கால்நடைகளுடன் ஒப்பிடுகின்றனது. சிந்திப்பவர்க்கு மட்டுமே குர்ஆன் விளங்கும் என்றும் அறிவுடையோர் மட்டுமே இதிலிருந்து படிப்பினை பெறுவார்கள் என்றும் கூறுகிறது.

மேலும் நம் இரட்சகர் குர்ஆனைப் பொறுமையுடன் ஆராயும் படியும் நம்பிக்கையாளர்களை ஊக்கு விக்கின்றார். ஆராயும் பொறுப்பை அறிஞர்களிடம் விட்டு விட்டு நம்மை ஆரமர ஓய்வெடுக்கச் சொல்ல வில்லை .

## குர்ஆன் கூறும் உண்மையான ஆலிம்

தவிரவும் இஸ்லாமிய அறிஞர்கள் என்றால் ஒரு குறிப்பிட்ட தோற்றத்துடன் ஏழு ஆண்டுகள் மத்ரஸாக்களின் பெஞ்சுக்களைத் தேய்த்தவர்கள், அரபிமொழி வல்லுனர்கள், ஹதீஸ் கலை அறிஞர்கள் ஆகியவர்கள்தான் என்ற பொதுவான முஸ்லிம்களின் எண்ணத்தைக் குர்ஆன் தவிடுபொடி யாக்குகின்றது. இறைவனை அஞ்சக் கூடியவர்களே உண்மையில் அறிஞர்கள் என்று அறிஞர்களுக்கு இலக்கணம் கூறுகிறது. (35:28) எனவே இத்தகைய போலி அறிஞர்களையும் அவர்களுடைய கோயபல்ஸ் பொய்ப்பிரசாரங்களையும் நம்பி குர்ஆனை விட்டு விலகி விடாமல் இறைவனின் வளமிக்க வார்த்தைகளான அல்குர்ஆனை மட்டும் பின்பற்றும் நல்லோர்களில் நம்மை ஆக்கி வைக்க இறைவனிடம் பிரார்த்திப்போம். அதனை கற்றுக் கொள்ளக் கூடிய, அதிலிருந்து ஞானங்களையும், நிவாரணங் களையும், வழிகாட்டுதல்களையும் பெற்றுக் கொள்ளக் கூடிய பாக்கியம் பெற்றவர்களின் கூட்டத்தில் நாமும் சேர்ந்து கொள்ள முயற்சிப்போம்.✵✵

# அளர்த்தம்

## வசனம் 2:189 க்கு

**இறைவனின் வார்த்தைகளுக்கு முழுமையான மொழிபெயர்ப்பு எம்மொழியிலும் சாத்தியமில்லாத ஒன்றே**

மானுட சமூகத்திற்கு வழிகாட்ட தன் வார்த்தைகளை வேதமாக்கி, இறைவன் இறக்கி வைத்த இறுதி வேதமே அல்குர்ஆன். அது வளமான அரபி மொழியில் ஆனது. அனைத்தையும் படைத்த இறைவன் தன் முழுமையான ஞானத்துடன் கூறிய வார்த்தைகளாதலால் அவை காலத்தின் மாற்றங்களையும் வளர்ச்சியையும் தாண்டி மானுடர்க்கு வழிகாட்ட வல்லதாக உள்ளது. இறக்கப்பட்ட காலம் முதல் உலக இறுதி வரை மானுடர்க்கு வழிகாட்டியாகவும், அருளாளகவும் செயலாற்ற உள்ளது. இறைவனின் வார்த்தைகள் விவரிக்கப்பட்டால் அவற்றை எழுதி முடிக்க ஏழுகடல்கள் மையாகவும், உலக மரங்கள் அனைத்தும் பேனாக்களாகவும் ஆனாலும் அது இயலாத ஒரு காரியமே. எனவே இறைவனின் வார்த்தைகளுக்கு தவறேயில்லாத முழுமையான ஒரு மொழிபெயர்ப்பு எம்மொழியிலும் சாத்தியமில்லாத ஒன்றே, ஏனெனில் காலங்களைத் தாண்டி நிற்கும் இறைவனின் வார்த்தைகளை காலத்தின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட மனிதர்கள் மொழிபெயர்ப்பின்போது இதுதான் இறுதியான, முடிவான மொழிபெயர்ப்பு என்று கூறிவிட முடியாது. இது முதல் காரணம்,

**மனிதன் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றவாறு அதற்கு பொருத்தக்கூடிய வார்த்தைகளை இறைவன் பயன்படுத்தியிருக்கிறார்.**

இதற்கு உதாரணமாக, குர்ஆனில் பயன்படுத்தப்படும் 'அலக்' என்ற வார்த்தையைக் கூறலாம். மனிதப்படைப்பைப் பற்றி இறைவன் விவரிக்கையில் விந்திற்கு அடுத்தபடியாக மனிதன் 'அலக்'

என்ற நிலையில் இருப்பதாகக் கூறுகிறார். இவ்வார்த்தைக்கு அரபு மொழியில் இரு பொருள்கள் உண்டு. ஒன்று 'இரத்தக்கட்டி', மற்றொன்று 'ஒட்டிக்கொண்டு உறிஞ்சக் கூடிய ஒன்று - அட்டை போன்றது'. இத்தனை காலமும் மனிதர்கள் அனைவராலும் குர்ஆனின் இவ்வார்த்தைக்கு இரண்டாம் அர்த்தம் பொருந்தாது எனவே முதல் அர்த்தமான இரத்தக்கட்டி என்பதே மனிதப்படைப்புக்கு நெருக்கமாக உள்ளது என்றெண்ணி அவ்வாறே மொழி பெயர்க் கப்பட்டும் வந்துள்ளது. ஆனால் சமீபத்தில் குர்ஆனை ஆராய்ந்த ஒரு விஞ்ஞானியான "மாரிஸ் புகைல்" அந்த இடத்தில் இரத்தக்கட்டி என்று அர்த்தம் கொள்வது பொருந்தாது என ஆதாரங்களுடன் நிரூபித்துக் கூறினார். மனிதன் ஒருபோதும் கர்ப்பக் காலத்தில் இரத்தக்கட்டி என்ற நிலையில் இருப்பதில்லை. மாறாக ஒட்டிக் கொண்டு உறிஞ்சக்கூடிய (Embroyo) ஒரு பிண்டமாகத்தான் அவன் விந்திற்கு அடுத்த நிலையில் இருக்கின்றான். எனவே அலக் என்ற வார்த்தைக்கு இரண்டாம் அர்த்தமான ஒட்டிக் கொண்டு உறிஞ்சக் கூடிய நிலை என்பதே சரியானது என்பதை மனிதர்கள் அறிந்து கொண்டனர்.

இவ்வாறு எல்லாக் காலங்களிலும் மனிதர்களின் அறிவு வளர்ச்சிக்கேற்றவாறு அதற்குப் பொருந்தக்கூடிய வார்த்தைகளை இறைவன் பயன்படுத்தி இருக்கிறார். குர்ஆன் மானுட சமூகத்தின் அறிவுக்கு மிகவும் முந்தியதாக உள்ளது.

இத்தகைய இடங்களில் மானுட சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்கு குறிப்புகளையும் சூத்திரங்களையும் இறைவன் அளிக்கிறார்....

## <u>ஒவ்வொரு காலகட்டத்திற்கும் குர்ஆனை விளக்கம் பொறுப்பை இறைவன் தன் வசமே வைத்திருக்கின்றார்.</u>

மேலும் ஒவ்வொரு செய்திக்கும் ஒரு கால கட்டமுண்டு, எனவே நீங்கள் (அவை நிகழும் போது) அவற்றை அறிந்து கொள்வீர்கள்' என்ற இறைவாக்கு (6:67) சில விஷயங்களுக்கான காலகட்டம் வரும் வரை நாம் அவற்றைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. ஒவ்வொரு காலகட்டத்திலும் நம்பிக்கை யாளர்களுக்குக் குர்அனை விளக்கும் பொறுப்பை இறைவன் தன் வசமே வைத்திருக்கின்றார். (55:1-3, 7-5:19)) இதற்கு உதாரணமாக 'மனிதர்களுடன்

பேசும் விலங்கு' (27:82) என்று இறைவன் முன்னறிவிப்பதைக் கூறலாம். 74வது அத்தியாயத்தில் இறைவன் கூறும் 19 என்ற அற்புதத்தையும் கூறலாம். மனிதர்கள் தங்கள் இரட்சகரின் வசனங்களில் உறுதி கொண்டவர்களாக இல்லை என்று ஆதாரத்துடன் கூறிய விலங்காக கம்ப்யூட்டர் உள்ளது. இப்போது இது நிகழ்ந்து விட்டபடியால் நம்பிக்கை யாளர்கள் அவற்றை அறிந்து கொண்டு விட்டனர். வெகு விரைவில் முழு மனித சமூகமும் இதனை அறிந்து கொள்ளும். ஆயினும் 27:82க்கான விளக்கம் இதுதான் என்பதை நமக்கு முன்னர் வாழ்ந்தவர்கள் என்னதான் முயன்றாலும் அறிந்து கொண்டிருக்க முடியாது. மனிதர்களின் உறுதியற்ற நிலையை விலங்கு சொல்லிக் காண்பித்து விட்டது. அவர்களுக்கு உறுதியைக் கொடுக்க 19 என்ற அற்புதமும் வெளிப்பட்டு விட்டது 74:31ல் இறைவன் கூறும் விஷயங்களை 19 என்ற அற்புதம் வரிக்கு வரி, வார்த்தைக்கு வார்த்தை நிகழ்த்திக் காட்டுவதை இதற்கு முன்னர் வாழ்ந்தவர்கள் முயன்றாலும் அறிந்து கொண்டிருக்க முடியாது.

எனவே இத்தகைய இடங்களிலும் மொழிபெயர்க்கும் போது தவறுகள் ஏற்படும் சாத்தியங்கள் உள்ளன.

## குர் ஆன் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று குர் ஆன் நமக்குக் கூறுகிறது

அடுத்தபடியாக, ஒரு மூல மொழியில் இருந்து மற்றொரு மொழிக்கு மொழிபெயர்க்கும் போது இயல்பாக ஏற்படும் மொழிச் சிரமங்கள் ஒரு மொழியில் உள்ள எல்லாச் சொற்களுக்கும் நிகரான, சரியான சொற்கள் மற்றொரு மொழியில் இருப்பதில்லை. ஒரு மொழியில் ஒரு சொல்லால் குறிப்பிடப்படுவதை மற்றொரு மொழியில் மொழிபெயர்க்கும் போது பல சொற்களைப் பயன்படுத்தும் நிலை, ஏற்படலாம். அதற்கு ஈடான சொற்களே இல்லை எனும் நிலை கூட ஏற்படக் கூடும்.

இதற்கு உதாரணமாக ஸப்ர் என்ற அரபி வார்த்தையைக் கூறலாம். இந்த வார்த்தைக்கு பொறுமை, பிணைத்துக் கொள்ளுதல், விலங்கிட்டுக் கொள்ளுதல், விடாமுயற்சி, தாங்கிக் கொள்ளுதல், தடுத்துக் கொள்ளுதல், உறுதியுடன் இருத்தல், ஆறுதல் கொள்ளுதல், சுய கட்டுப்பாடு, சுய அதிகாரம், தொடர்ந்து ஒரே தன்மையுடன் இருத்தல் ஆகிய (ஒன்றுக்கொன்று தொடர்புடைய பல

# அல்-குர்ஆன் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மொழி பெயர்ப்பும், அதன் தமிழாக்கமும்

**Sura 2: The Heifet (Al-Baqarah)**

**அத்தியாயம் - 2 : பசுங்கன்று (அல்பகறா)**

| | | |
|---|---|---|
| اِذْ قَالَ لَهٗ رَبُّهٗۤ اَسْلِمْ ۙ قَالَ اَسْلَمْتُ لِرَبِّ الْعٰلَمِيْنَ | 131. When his Lord said to him, “Submit," he said, "I submit to the Lord of the universe." | 131. அவருடைய இரட்சகர் அவரிடம் சரணடைவீராக, எனக் கூறிய பொழுது, அவர் கூறினார், பிரபஞ்சத்தின் இரட்சகருக்கு நான் சரணடைகின்றேன். |
| وَوَصّٰى بِهَاۤ اِبْرٰهٖمُ بَنِيْهِ وَ يَعْقُوْبُ يٰبَنِىَّ اِنَّ اللّٰهَ اصْطَفٰى لَـكُمُ الدِّيْنَ فَلَا تَمُوْتُنَّ اِلَّا وَاَنْتُمْ مُّسْلِمُوْنَ | 132. Moreover, Abraham exhorted his children to do the same, and so did Jacob: "O my children, God has pointed out the religion for you; do not die except as submitters." | 132. அத்துடன், அதனையே செய்யுமாறு தன்னுடைய பிள்ளைகளையும் ஆப்ரஹாம் தூண்டினார், மேலும் ஜேகபும் அவ்வாறே செய்தார்: என்னுடைய பிள்ளைகளே, உங்களுக்குரிய மார்க்கத்தைக் கடவுள் சுட்டிக் காட்டியுள்ளார்; சரணடைந் தோராகவே அன்றி மரணித்து விடாதீர்கள். |
| اَمْ كُنْتُمْ شُهَدَآءَ اِذْ حَضَرَ يَعْقُوْبَ الْمَوْتُ ۙ اِذْ قَالَ لِبَنِيْهِ مَا تَعْبُدُوْنَ مِنْۢ بَعْدِىْ قَالُوْا نَعْبُدُ اِلٰهَكَ وَاِلٰهَ اٰبَآئِكَ اِبْرٰهٖمَ وَاِسْمٰعِيْلَ وَاِسْحٰقَ اِلٰهًا وَّاحِدًا ۖۚ وَّنَحْنُ لَهٗ مُسْلِمُوْنَ | 133. Had you witnessed Jacob on his death bed; he said to his children, "What will you worship after I die?" They said, "We will worship your god; the god of your fathers Abraham, Ismail, and Isaac; the one god. To Him we are submitters." | 133. அவருடைய மரணப்படுக்கையின் மீது, ஜேகபை நீர் பார்த்திருந்தால்; அவர் தன் பிள்ளைகளிடம் கூறினார், நான் மரணித்த பின்னர் நீங்கள் எதனை வழிபடுவீர்கள்? அவர்கள் கூறினர், உம்முடைய இறைவனையே நாங்கள் வழிபடுவோம்; உம்முடைய தந்தையரான ஆப்ரஹாம், இஸ்மாயில் மற்றும் ஐசக்கின் இறைவன்; அந்த ஒரே இறைவன், அவருக்கே நாங்கள் சரணடைந்தோராக இருக்கின்றோம். |

تِلْكَ أُمَّةٌ قَدْ خَلَتْ لَهَا مَا كَسَبَتْ وَلَكُمْ مَّا كَسَبْتُمْ وَلَا تُسْأَلُوْنَ عَمَّا كَانُوْا يَعْمَلُوْنَ

134. Such is a community from the past. They are responsible for what they earned, and you are responsible for what you earned. You are not answerable for anything they have done.

134. இவ்விதமானது கடந்த காலத்தில் இருந்து ஒரு சமுதாயம். அவர்கள் சம்பாதித்தவற்றுக்கு அவர்கள் பொறுப்பாக இருக்கின்றனர், மேலும் நீங்கள் சம்பாதித்தவற்றுக்கு நீங்கள் பொறுப்பாக இருக்கின்றீர்கள். அவர்கள் செய்த எந்த ஒன்றுக்கும் நீங்கள் பதிலளிக்க வேண்டியவர்களாக இல்லை.

*Submission (Islam)*
*Abraham's Religion**

**அர்ப்பணித்தல் (இஸ்லாம்)**
**இப்றாஹீமுடைய மார்க்கம்**

وَقَالُوْا كُوْنُوْا هُوْدًا اَوْ نَصٰرٰى تَهْتَدُوْا قُلْ بَلْ مِلَّةَ اِبْرٰهٖمَ حَنِيْفًا وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِيْنَ

135. They said, "You have to be Jewish or Christian, to be guided." Say, "We follow the religion of Abraham - monotheism - he never was an idol worshiper

135. அவர்கள் கூறினர், வழிநடத்தப்பட்டவர்களாக இருப்பதற்கு, நீங்கள் யூதராகவோ அல்லது கிறிஸ்துவராக இருத்தல் வேண்டும். கூறுவீராக, நாங்கள் ஆப்ரஹாமின் மார்க்கத்தைப் பின்பற்றுகின்றோம் - ஏகத்துவம் -அவர் ஒருபோதும் போலித்தெய்வ வழிபாடு செய்யும் ஒருவராக இருந்ததில்லை.

*No Distinction Among God's Messengers*

**இறைத்தூதர்களிடையில் பேதம் இல்லை.**

قُوْلُوْٓا اٰمَنَّا بِاللّٰهِ وَمَآ اُنْزِلَ اِلَيْنَا وَمَآ اُنْزِلَ اِلٰٓى اِبْرٰهٖمَ وَاِسْمٰعِيْلَ وَاِسْحٰقَ وَيَعْقُوْبَ وَ الْاَسْبَاطِ وَمَآ اُوْتِىَ مُوْسٰى وَعِيْسٰى وَمَآ اُوْتِىَ النَّبِيُّوْنَ مِنْ رَّبِّهِمْ لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ مِّنْهُمْ وَنَحْنُ لَهٗ مُسْلِمُوْنَ

136. Say, "We believe in God, and in what was sent down to us, and in what was sent down to Abraham, Ismail, Isaac, Jacob, and the Patriarchs; and in what was given to Moses and Jesus, and all the prophets from their Lord. We make no distinction among any of them. To Him alone we are submitters."

136. நீங்கள் (ஸலாத்) தொடர்புத் தொழுகைகளைக் கடைப் பிடிக்கவும் (ஜகாத்) கடமையான தர்மத்தைக் கொடுக்கவும் வேண்டும். உங்கள் ஆத்மாக்களின் சார்பாக நீங்கள் முற்படுத்தி அனுப்புகின்ற நன்மை எது வாயினும், கடவுள்-யிடம் நீங்கள் அதனைக் காண்பீர்கள். நீங்கள் செய்கின்ற ஒவ்வொன்றையும் கடவுள் பார்ப்பவராக இருக்கின்றார்.

فَاِنْ اٰمَنُوْا بِمِثْلِ مَآ اٰمَنْتُمْ بِهٖ فَقَدِ اهْتَدَوْا وَاِنْ تَوَلَّوْا فَاِنَّمَا هُمْ فِىْ شِقَاقٍ فَسَيَكْفِيْكَهُمُ اللّٰهُ وَهُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ

137. If they believe as you do, then they are guided. But if they turn away, then they are in opposition. God will spare you their opposition; He is the Hearer, the Omniscient.

137. உங்களைப் போல் அவர்கள் நம்பிக்கை கொள்வார்களாயின், அப்போது அவர்கள் வழிநடத்தப்பட்டவர்களாக இருக்கின்றனர். ஆனால் அவர்கள் திரும்பிச் சென்று விட்டால், அப்போது அவர்கள் எதிரணியில் தான் இருக்கின்றனர். அவர்களுடைய எதிர்ப்பை கடவுள் உங்களை விட்டும் தவிர்த்து விடுவார்; அவரே செவியேற்பவர், அனைத்தையும் அறிந்தவர்.

صِبْغَةَ اللّٰهِ ۚ وَمَنْ اَحْسَنُ مِنَ اللّٰهِ صِبْغَةً ۖ
وَّنَحْنُ لَهٗ عٰبِدُوْنَ

138. Such is God's system, and whose system is better than God's? "Him alone we worship."

138. கடவுள்-ன் வழிமுறை, இத்தகையதாகவே உள்ளது, மேலும் கடவுள்-வுடையதை விடவும் மேலான வழி முறை எவருடையது? அவரை மட்டுமே நாங்கள் வழிபடுகின்றோம்.

قُلْ اَ تُحَآجُّوْنَنَا فِى اللّٰهِ وَهُوَ رَبُّنَا وَرَبُّكُمْ ۚ وَلَنَآ اَعْمَالُنَا
وَلَكُمْ اَعْمَالُكُمْ ۚ وَنَحْنُ لَهٗ مُخْلِصُوْنَ ۙ

139. Say, "Do you argue with us about God, when He is our Lord and your Lord? We are responsible for our deeds, and you are responsible for your deeds. To Him alone we are devoted."

139. கூறுவீராக, அவரே எங்களுடைய இரட்சகராகவும் உங்களுடைய இரட்சகராகவும் இருக்கும் பொழுது, கடவுள்-ஐப் பற்றி எங்களிடம் நீங்கள் தர்க்கிக்கின்றீர்களா ? எங்களுடைய செயல்களுக்கு நாங்கள் பொறுப்பாக இருக்கின்றோம், மேலும் உங்களுடைய செயல்களுக்கு நீங்கள் பொறுப்பாக இருக்கின்றீர்கள். நாங்கள் அவருக்கு மட்டுமே அர்ப்பணித்துக் கொண்டவர்களாக இருக்கின்றோம்.

அர்த்தங்கள் அரபி அகராதிகளில் காணப்படுகின்றன. மொழி பெயர்ப்புச் செய்யும் போது இவற்றில் ஏதேனும் ஒரு வார்த்தையையே இடம்பெறச் செய்யமுடியும். எனவே இவ்வகையிலும் மொழிபெயர்ப்புச் செய்யும்போது ஏதேனும் தவறுகள் ஏற்படும் சாத்தியம் உள்ளது. அதுபோல் அரபி மொழியில் இருவார்த்தைகள் கொண்டு கூறப்படும் சொற்களை மாற்று மொழியில் மொழி பெயர்க்கும்போது அம்மொழியில் அவ்விரு சொற்களுக்கும் பொருத்தமான **(One - to One Correspondence)** இரு சொற்கள் இல்லாமல் இருக்கலாம். ஏனெனில் ஒரு மொழியில் உள்ள எல்லாச் சொற்களுக்கும் பொருத்தமான சொற்கள் மற்ற மொழியில் இல்லாமல் இருக்கலாம். அதேபோல் அரபி மொழியில் இரண்டு வார்த்தைகளால் குறிப்பிடப்படும் இரு விஷயங்களைக் குறிப்பிட மற்றொரு மொழியில் ஒரே வார்த்தையைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படலாம். எனவே இவ்விதமாகவும் மொழிபெயர்க்கும் போது சில தவறுகள் நேரிடலாம்.

தவிரவும் இறைவனின் வார்த்தைகளுக்கு இங்கே மொழிபெயர்ப்புச் செய்வது மனிதர்களே என்பதால் மனிதர்களின் பலஹீனங்களான மறதி, அவசரம் அளவுக்குட்பட்ட அறிவு ஆகியவற்றின் காரணமாகவும் தவறுகள் நேரிடக் கூடும்.

ஆயினும் குர்ஆன் மானிட சமூகம் முழுமைக்குமான இறைவனின் இறுதிச் செய்தி. இறைவனின் இந்த இறுதிச் செய்தி மானிட சமூகத்தைச் சென்றடைய வேண்டும் என்றால் அச்செய்தி மற்ற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட வேண்டும். குர்ஆன் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று குர்ஆன் நமக்குக் கூறுகிறது.

(26:198-200, 41:44)

எனவே இத்தகைய நிலையில் மொழிபெயர்ப்புக்களில் ஏற்படும் தவறுகளை திருத்திக் கொள்ளவும் அவை சரியானவைதானா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும் குர்ஆனும் இது இறக்கப்பட்ட அரபி மொழியும் பாதுகாக்கப்பட்டு உயிருடன் உள்ளன. எனவே எந்த ஒரு மொழி பெயர்ப்பையும் சிந்தனையுடனேயே அணுக வேண்டும்.

## குர்ஆன் என்பது ஒரு புத்தகத்தில் உள்ள எழுத்துக்கள் அல்ல. குர்ஆனின் கருத்துக்களே குர்ஆன் ஆகும்

ஒரு மொழிபெயர்ப்பும் அதன் நோக்கமும் வழிகாட்டலும் சரியானதுதானா? என்பதை நாம் அந்த மொழிபெயர்ப்பு கலப்பின்றி ஓரிறைக் கொள்கையைச் சொல்லுகிறதா, குர் ஆனை மட்டும் பின்பற்ற வேண்டும் என்பதைச் சொல்கிறதா என்பதை வைத்து முடிவு செய்யலாம். குர்ஆன் என்பது ஒரு புத்தகத்தில் உள்ள எழுத்துக்கள் அல்ல. குர்ஆனின் கருத்துக்களே குர்ஆன் ஆகும். குர்ஆனுக்கு விளக்கங்களாகக் கூறப்படும் பலகருத்துக்களில் எது சரியானது என்பதை நம்பிக்கையாளர்கள் எப்படி அறிந்து கொள்வது?

இறைவன் நம்பிக்கை யாளர்களுக்கு மார்க்கத்தில் எந்தச் சிரமத்தையும் வைக்கவில்லை. அவர்கள் செய்ய வேண்டியது மிகவும் இலகுவான ஒரு காரியமே. ஆம். குர்ஆனுக்குக் கூறப்படும் விளக்கங்கள் எதுவானாலும் அவற்றைக் கேட்டு அறிவு கொண்டு சிந்தித்து அவற்றில் சிறந்தவற்றை எடுத்துச் செயல்படுத்த வேண்டும் என்றே குர்ஆன் நம்பிக்கை கயாளர்கட்கு வழி காட்டுகிறது.

## ஹதீஸ்களின் அடிப்படையில் மொழிபெயர்ப்பு செய்யப் பட்டுள்ளதால் அவற்றில் ஒன்று கூட ஓரிறைக் கொள்கையை கலப்பின்றி கூறவில்லை.

அந்த அடிப்படையில், இன்று உலகில் உள்ள அனைத்து மொழி பெயர்ப்புக்களும் ஹதீஸ்களின் அடிப்படையில் மொழிபெயர்க்கப் பட்டவையாகவே உள்ளன. அம்மொழி பெயர்ப்புக்கள் அனைத்தும் இறைவனுடன் முஹம்மத் நபியையும் இணைத்துத் துதித்துக் கொண்டிருக்கத் தூண்டுகிறது. இறைவனின் நரக வேதனையிலிருந்து முஹம்மத் நபி ஷஃபாஅத் செய்து நம்மை மீட்டு விடுவார் என்று கூறி இறைவனை விடவும் முஹம்மத் நபி கருணை மிக்கவர் என்பது போல் சித்தரிக்கின்றன. மேலும் குர்ஆனைத் தவிர மற்றொன்றைப் பின்பற்றுவது இணைவைப்பு என்று குர்ஆன் தெளிவாகக் கூறிவிட்ட பின்னரும் மற்ற ஆதாரங்களை (ஹதீஸ், இஜ்மாவு, கியாஸ், இமாம்கள் ) சிபாரிசு செய்கின்றன. எனவே குர்ஆனின்

அடிப்படைக்கு முரணான இம்மொழிபெயர்ப்புக்கள் தவறானவை என்பைத நாம் அறிந்து கொள்கிறோம்.

இன்று உலகில் பல்வேறு மொழிகளிலும், பல்வேறு குர்ஆன் மொழிபெயர்ப்புக்கள் உள்ளன. ஆனால் அவை அனைத்தும் ஹதீஸ்கள் என்ற கற்கால செவிவழிச் செய்திகளின் அடிப்படையில் மொழிபெயர்க் கப்பட்டவையாகவே உள்ளன. அவற்றில் ஒன்று கூட ஓரிறைக் கொள்கையைக் கலப்பின்றிக் கூறவில்லை .

**<u>சிற்சில தவறுகள் இருந்தாலும் - உலகில் மற்ற குர்ஆன் மொழிபெயர்ப்புகளில் அது ஒன்றே மிகச் சிறப்பானதாக உள்ள து.</u>**

குர்ஆன் இறங்கி 1400 வருடங்களாகியும் ஒரு மொழிபெயர்ப்புக் கூட குர்ஆனின் அடிப்படையான ஓரிறைக் கொள்கையைக் கலப்பின்றி தெளிவாகக் கூறவில்லையே என்ற மன ஆதங்கத்தில் தன் பிள்ளைகளுக்கு கொடுப்பதற்காக ஒருமொழிபெயர்ப்புச் செய்ய ரஷாத் கலீஃபா முனைந்த போதுதான் அவருக்கு இறைவன் 19 என்ற மாபெரும் அற்புதத்தை வெளிப்படுத்தினார். அவருடைய மொழிபெயர்ப்பில் தவறுகளே இல்லை என்று நாம் கூறவில்லை . ரஷாதும் ஒரு மனிதர்தான் என்ற அளவில் அவருடைய மொழிபெயர்ப்பிலும், விளக் கங்களிலும் சிற்சில தவறுகள் இருந்தாலும் குர்ஆனின் அடிப்படைக்கேற்ப செய்யப்பட்ட ஒரே முழுமையான மொழி பெயர்ப்பாக இருப்பதால் இன்று உலகில் உள்ள குர்ஆன் மொழிபெயர்ப்புக்களில் அதுவே மிகச் சிறப்பானதாக உள்ளது. அம்மொழிபெயர்ப்பில் உள்ள சிற்சில தவறுகளை நமக்கு அடையாளம் காட்டுவதற்காக மூலக்குர்ஆன் நம்மிடம் உள்ளது. ரஷாதின் மொழிபெயர்ப்பே மிகச் சிறந்த குர்ஆன் மொழிபெயர்ப்பு என்பதை மற்ற மொழிபெயர்ப்புகளுடன் ஒப்பிட்டுப் படிக்கும் நடுநிலையுள்ள சிந்தனையாளர்கள் நிச்சயம் விளங்கிக் கொள்ள முடியும், ஹதீஸ்களின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ள மொழி பெயர்ப்புக்களில் உள்ள குறைபாடுகளையும் புரிந்து கொள்ள முடியும்.

குர்ஆன் மொழிபெயர்ப்புக்கள் அரபிமொழி அறியாத மக்களுக்கு

குர்ஆனின் கருத்துக்களைச் சேர்ப்பிப்பதற்காகச் செய்யப் படுகின்றன. எனினும் ஹதீஸ்களின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ள மொழிபெயர்ப்புக்கள் அனைத்தும் பெரும்பாலான வசனங்களின் கருத்துக்களை மக்களிடம் சென்று அடையச் செய்யவில்லை. அவர்கள் குர்ஆனின் வார்த்தைகளை மொழிமாற்றம் செய்திருக் கின்றார்களே அன்றி அதன் கருத்துக்களை மொழிபெயர்க் கவில்லை என்பதையும் அதே சமயம் ரஷாத் கலீஃபாவின் மொழிபெயர்ப்பு எப்படி குர்ஆனின் கருத்துக்களை மக்களிடம் சேர்க்கிறது என்பதையும் இம்மாத அர்த்தம் அனர்த்தம் பகுதியில் நாம் காண்போம்.

## 2:189 க்கு ஜான் ட்டிரஸ்ட் மொழிபெயர்ப்பு

2:189 (நபியே! தேய்ந்து வளரும்) பிறையைப்பற்றி உம்மிடம் கேட்கின்றார்கள்; நீர் கூறும்: அவை மக்களுக்குக் காலம் காட்டு பவையாகவும், ஹஜ்ஜை அறிவிப் பவையாகவும் உள்ளன. (முஃமின்களே! ஹஜ்ஜை நிறை வேற்றிய பிறகு உங்கள் வீடுகளுக்குள் மேற்புறமாக வருவதில் புண்ணியம் (எதுவும் வந்து விடுவது இல்லை ); ஆனால் இறைவனுக்கு அஞ்சி நற்செயல் புரிவோரே புண்ணியமுடையோராவர். எனவே வீடுகளுக்குள் முறையான வாசல்கள் வழியாகவே செல்லுங்கள். நீங்கள் வெற்றியடையும் பொருட்டு அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுங்கள்.

●○●

## 2:189க்கு அப்துல் வஹ்ஹாப் - நிஜாமுத்தீன் மன்பா ஆகியோரின் மொழிபெயர்ப்பு

2:189 (நபியே! வளர்ந்து தேயும்) பிறைகளைப் பற்றி உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர். அவை மக்களுக்காகவும், ஹஜ்ஜுக்காகவும் கால நேரங்களைக் குறிப்பிடு பவையாகும் என்று நீர் கூறுவீராக! இன்னும் (முஃமின்களே! உங்களுடைய வீடுகளுக்கு அவற்றின் பின்புறங்களின் வழியாக நீங்கள் வருவதில் நன்மை (ஏதும்) இல்லை எனினும் (அல்லாஹ்வை) அஞ்சுகிறவர்தான் நன்மைக் குரியவர் எனவேடவீடுகளுக்கு அவற்றின் வாசல்கள் வழியாகவே நீங்கள் வாருங்கள். நீங்கள் வெற்றி யடைவதற்காக அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுங்கள்.

●○●

### 2:189க்கு காதியானிகள் மொழிபெயர்ப்பு

பிறைகளைப் பற்றி உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர். இவை ஹஜ்ஜுக்காகவும், மக்களுக்காகவும் (அதாவது அவர்களின் பணிகளுக்காகவும்) நேரத்தை அளவிடுதற்குரியவை என்று நீர் கூறுவீராக. நீங்கள் வீடுகளில் அவற்றின் பின்புற வழியாக நுழைவது நன்மையன்று. மாறாக இறைவனுக்கு அஞ்சி நடப்பவரே (உண்மையில்) நல்லவர். நீங்கள் வீடுகளில் அவற்றின் முன் வாயில்கள் வழியாகவே நுழையுங்கள். நீங்கள் வெற்றிபெற அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.

●○●

### 2:189க்கு I F T மொழிபெயர்ப்பு

(நபியே தேய்ந்து வளரும்) பிறைகள் பற்றி உம்மிடம் கேட்கிறார்கள்; கூறுவீராக: அவை மக்களுக்குக் காலங்காட்டியாகவும், ஹஜ்ஜுடைய நாட்களை அறிவிக் கின்றதாகவும் இருக்கின்றன. மேலும் (அவர்களிடம் கூறும்) உங்களுடைய வீடுகளுக்குள் அவற்றின் பின்புறமாக வருவது புண்ணியமானதல்ல. மாறாக இறைவனுக்கு அஞ்சுபவனே (உண்மையில்) புண்ணியவான் ஆவான். எனவே வீடுகளுக்குள் அவற்றின் வாயில்கள் வழியாகவே வாருங்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள். இதனால் நீங்கள் வெற்றி பெறக்கூடும்.

●○●

### 2:189க்கு பிக்தால் மொழிபெயர்ப்பு

They ask thee (O! Mohammed) of New moons, say: They are fixed seasons for mankind and for the Pilgrimage. It is not righteous that you go to houses by the back there of (as do the idolators at certain seasons) but the righteous man is he who wardeth off (evil). So go to houses by the gates threof, and observe your duty to Allah, that ye may be successful.

●○●

### 2:189 Yusuf Ali. மொழி பெயர்ப்பு

They ask thee concerning the New moons. say: They are but signs to mark fixed periods of Time. In (the affairs of ) man, And for Pilgrimage.

It is no virtue if ye enter your houses from the back: It is virtue if ye fear Allah. Enter houses through the proper doors. And fear Allah:That ye may Prosper.

●○●

## 2:189க்கு Rashad Khalifa மொழிபெயர்ப்பு

They ask you about the Phases of the moon! say, “They Provide a timing device for the People, and determine the time of Hajj. It is not righteious to beat around the bush, Righteousness is attained by upholding the commandments and is attained by being straight forward. Your shall observe God, that you may succeed.

●○●

## 2:189ன் ரஷாத் மொழிபெயர்ப்பின் தமிழாக்கம்

நிலவின் பல்வேறு நிலைகளைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர்! கூறும், "அவை மக்களுக்கு காலம் கணிக்கும் ஒரு கருவியை வழங்குகின்றன, மேலும் ஹஜ்ஜின் காலத்தையும் நிர்ணயிக்கின்றன. எதையும் சுற்றி வளைப்பது நன்மையானதல்ல. கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமும் நேர்மையாக இருப்பதன் மூலமே நன்மையை அடைய முடியும். நீங்கள் வெற்றி பெறுவதற்காக இறைவனை அஞ்சிக் கொள்ளுங்கள்.

●○●

அனைத்து மொழிபெயர்ப்புக் களையும் ரஷாதின் மொழி பெயர்ப்போடு ஒப்பிட்டுப் படிப்பவர்கள் மற்ற மொழி பெயர்ப்புக்களில் இல்லாத சில விஷயங்களை ரஷாதின் மொழி பெயர்ப்பில் காண முடியும். மேலும் குர்ஆனின் கருத்துக்களை மக்களிடம் சேர்ப்பிப்பதில் எவ்வாறு அது சிறந்து விளங்குகிறது என்றும் புரிந்து கொள்ள முடியும்.

இப்போது நாம் 2:189 குறித்து சில விஷயங்களைக் காண்போம். இவ்வசனத்தின் முதல் பகுதியை அனைவரும் சரியாகவே மொழி பெயர்த்துள்ளனர். நிலவைப்பற்றி கேள்வியும் அதற்குக் கூறப்பட வேண்டிய பதிலும் மிகத் தெளிவாகவே மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. ஆயினும் அதற்கடுத்து வரும் பகுதியை 'வீடுகளுக்குள் பின்புறமாக நுழையாதீர்கள் வாயில் வழியாகவே நுழையுங்கள்' என்றே அனைவரும் மொழிபெயர்த்

துள்ளனர். மேலும் அவர்கள் அடைப்புக் குறிகளுக்குள்ளும், அடிக்குறிப்புக்களிலும் ஹதீஸ்களில் பதியப்பட்டுள்ள ஒரு தகவலைத் தந்திருக்கின்றனர். அதாவது அன்றைய மக்காவின் நிராகரிப்பாளர்கள் ஹஜ்ஜுக்கு இஹ்ராம் அணிந்ததிலிருந்து (ஹஜ்ஜைத் துவங்கியதில் இருந்து) தங்கள் வீடுகளுக்குள் வாயில்கள் வழியே நுழைய மாட்டார்களாம். மேற்புறமாக ஓட்டைப் பிரித்தோ அல்லது பின்புறமாக ஓட்டையிட்டோ அதன் வழியாகத்தான் நுழைவார்களாம். அவர்களுடைய இந்த மூடப்பழக்க வழக்கத்தைக் கண்டிக்கும் முகமாகவே இவ்வசனம் இறக்கப்பட்டது என்று ஒரு ஹதீஸில் பதியப்பட்டுள்ளது.

ஹதீஸ்களின் அடிப்படையில் இவர்களுடைய அனைத்து மொழி பெயர்ப்புக்களும் அமைந் திருப்பதால் அனைத்து மொழி பெயர்ப்புக்களிலும் மேற்கண்ட கருத்தே பிரதானமாகக் கூறப்படுகிறது. ஆயினும் காலங்காலமாக முஸ்லிம்கள் மத்தியில் இவ்வசனத்திற்கு மற்றொரு அர்த்தமும் வழங்கப்படுகிறது. அதாவது சுற்றி வளைத்துச் செயல்படாமல் நேரடியான, நேர்மையான முறையில் செயல்படவேண்டும் என்பதே அது. இந்த அர்த்தத்தில் முஸ்லிம்கள் மத்தியில் புழக்கத்தில் உள்ள பழமொழியாகவும் இது உள்ளது. இத்தகவலை அப்துல்லா யூசுஃப் அலி தன்னுடைய மொழிபெயர்ப் பின் அடிக்குறிப்பில் கூறியும் இருக்கிறார். (எண்:203)

எனவே மேற்கண்ட வசனத்திற்கு ஹதீஸ்களின் அடிப்படையில் ஒரு கருத்தும், முஸ்லிம்கள் மத்தியில் நிலைநாட்டப் பட்டதாக வேறு ஒரு கருத்தும் உள்ளது என்பதை நாம் அறிந்து கொள்கிறோம்.

இந்நிலையில் இவ்விரு கருத்துக்களில் எது சரியானது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். ல் சிந்திப்பவர்க்கு மட்டுமே குர்ஆன் விளங்கும் என்பதை நாம் இப்போது அறிந்திருக்கின்றோம் அல்லவா?

முதலில் கூறப்பட்ட அர்த்தம் ஹதீஸ்களின் அடிப்படையில் செய்யப்பட்டது. ஹதீஸ்களை நாம் ஆதாரமாகக் கொள்வதற்கு அவற்றிற்கு எந்தத் தகுதியும் இல்லை என்பது நாம் அறிந்த ஒன்று. மேலும் இந்தக் கருத்தில்

அறிவிக்கப்பட்டிருக்கும் ஹதீஸ்கள் வழமை போலவே குர்ஆனுடைய வார்த்தைகளைக் குருட்டுத் தனமாக விளங்கிக் கொண்டு அதற்கு அப்படியே ஒரு உடனடி விளக்கம் (Snapshot Interpretation) தர முனைந்திருப்பது விளங்குகிறது.

அங்கே கூறப்பட்டிருப்பது ஒரு (Phrase) பழமொழி, சொல்லடை ஆகும். மக்கள் புழக்கத்தில் அதன் அர்த்தம் நன்கறியப்பட்ட வேறு ஒன்றாக உள்ள நிலையில் அப்பழமொழியின்வார்த்தைகளுக்கு அப்படியே அர்த்தம் உண்டாக்க முயற்சி செய்திருக்கிறார்கள். அதற்காக அக்கால அரபியரிடையே அத்தகையதொரு மூடப்பழக்கம் இருந்ததாகவும் அதைக் கண்டிக்கவே இவ்வசனம் இறங்கியதாகவும் ஒரு கதையைக் கட்டி இருக்கிறார்கள். ஏனெனில் அத்தகையதொரு பழக்கம் அரபியரிடையே இருந்ததற்கு இக்கருத்தில் அறிவிக்கப்பட்ட மிகச்சில ஹதீஸ்களைத் தவிர வேறு ஆதாரம் எதுவும் இல்லை .

இது எப்படியிருக்கின்றதென்றால், தலையைச் சுற்றி மூக்கைத் தொடாதே (சுற்றி வளைத்துக் காரியங்கள் செய்யாதே) என்று கூறப்பட்டிருப்பதை அக்கால அரபியர்கள் தலையைச் சுற்றிக் கொண்டுதான் மூக்கைத் தொடுவார்கள். நேரடியாக மூக்கைத் தொடுவதை அவர்கள் தவறென்று நினைத்தார்கள் என்று கூறுவதைப் போல் உள்ளது.

மேலும் மூடத்தனமான வெற்றுச் சடங்குகளில் எந்த நன்மையும் இல்லை என்பதை இவ்வசனத்திற்குப் பன்னிரு வசனங்கட்கு முன்னர் 2:117ல் இறைவன் நேரடியாக, தெளிவாக கூறுகிறார். கிழக்கிலோ அல்லது மேற்கிலோ உங்கள் முகங்களைத் திருப்பிக் கொள்வதில் எந்த நன்மையும் இல்லை, மாறாக, என்று கூறி நற்குணங்களையும், நற்செயல்களையும் இறைவன் பட்டியலிடுகிறார் மேலும் அவையே நன்மை என்றும் கூறுகிறார்.

இதுவும் அதைப்போன்ற ஒரு வசனமே என்ற அவர்களின் கூற்று சரியானது அல்ல என்பதை மேலும் சில காரணங்களைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

ஹதீஸ்களின் அடிப்படையில் செய்யப்பட்ட மொழி பெயர்ப்புக்களில் சிலவற்றில் வீடுகளின் மேற்புறமாக என்றும் சிலவற்றில் பின்புறமாக என்றும் உள்ளது. ஆனால் வசனத்தில்

'ஜீஹரிஹா' (முதுகு புறமாக) என்ற பதம் இடம் பெறுகிறது.

எனவேதான் இக்கருத்துக் கூறப்படும் ஹதீஸ்கள் சிலவற்றில் (முதுகுப்புறமாக என்று கூறப்படுவதால்) அவர்கள் வீடுகளின் ஓட்டைப்பிரித்துக் கொண்டு உள்ளே நுழைந்தார்கள் என்றும், வேறு சில ஹதீஸ்களில் வீடுகளின் பின்புறம் ஓட்டையிட்டுக் கொண்டு நுழைந்தார்கள் என்றும் முரண்பாடான தகவல்கள் பதியப்பட்டுள்ளன. அது எப்படி ஓட்டைப் பிரித்து உள்ளே குதித்தார்கள் என்று சொல்வது? நம்பும்படி இல்லையே, என்பதால் பின்புறம் ஓட்டையிட்டுக் கொண்டு நுழைந்தனர் என்று ஹதீஸைக் கட்டியவர் எண்ணியிருக்கலாம். எனவே முதலில் கூறப்பட்ட பொய்யின் (Modified) சீர் செய்யப்பட்ட அமைப்பே இரண்டாம் வகை ஹதீஸ்கள் என்று நாம் யூகிக்கலாம். உண்மையில் அத்தகையதொரு மூடப்பழக்கம் இருந்திருக்குமானால் அது முரண்பாடில்லாமல் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் அல்லவா? மேலும் சில ஹதீஸ்களில் ஹஜ்ஜின் காலம் முழுவதும் அவர்கள் இவ்வாறு செய்தனர் என்றும், மற்ற சில ஹதீஸ்களில் திரும்பி வரும்போது மட்டும் அவ்வாறு செய்தனர் என்றும் முரண்பாடுடன் உள்ளது.

மேலும், வசனத்தில், ஹஜ்ஜின்போது என்று இல்லை, 'உங்கள் வீடுகளுக்குள்' என்றும் இல்லை. 'வீடுகளுக்குள் ' என்றே உள்ளது. சிலர் 'உங்கள்' என்பதை அடைப்புக் குறிக்குள் கொடுத்திருந்தாலும், மற்ற சிலர் உங்கள் வீடுகளுக்குள் என்றே வசனத்தில் உள்ளது போல் மொழிபெயர்த்துள்ளனர். எனவே ஹஜ்ஜின் காலத்தில் அக்கால அரபியர்களால் மட்டும் செய்யப்பட்ட ஒரு மூடப் பழக்கத்தைக் கண்டிக்கவே இவ்வசனம் இறங்கியது என்பது பொருத்தமற்ற ஒன்றாகவே உள்ளது. மாறாக சுற்றிவளைத்துக் காரியங்கள் செய்ய வேண்டாம். நேரடியாக நேர்மையுடன் இருக்க வேண்டும் அதுவே நன்மையாகும் என்ற மக்கள் புழக்கத்தில் உள்ள கருத்தே மிகவும் பொருத்தமானதாக உள்ளது. இறுதிநாள் வரை மக்களுக்கு வழிகாட்டக் கூடிய இறுதி வேதத்தில் சுற்றி வளைத்துக் காரியங்கள் செய்யவேண்டாம் என்ற இவ் வசனத்திற் கொப்பாக 'கூறுவதை நேரடியாக, சரியாகச் சொல்லுங்கள்' என்ற 33:70 வசனம் உள்ளது. எனவே

இவ்வசனத்திற்கு ரஷாதின் மொழிபெயர்ப்பே மிகச் சரியானது என்று நாம் அறிகின்றோம்.

அவர்களுடைய மொழி பெயர்ப்புக்களின்படி இவ்வசனம் முதலில் நிலவைப் பற்றிய விளக்கத்தையும் அதைத் தொடர்ந்து முன்பின் தொடர்பில்லாமல் மூட நம்பிக்கைகளையும் கண்டிக் கின்றது. ஆனால் விதிவசமாக இன்றைய முஸ்லிம்களிடத்தில் நிலவைப் பற்றிய மூடநம்பிக்கைகள் தான் ஏராளம். முதல் பிறையைக் கண்டால் சலாம் சொல்வது, (உண்மையில் இவர்கள் கண்ணால் காண்பது இரண்டாம் பிறையாகவோ, மூன்றாம் பிறையாகவோதான் இருக்கும்!) அப்போது விரலால் கண்களை ஒற்றிக் கொள்வது. போன்ற சிலரிடம் மட்டும் உள்ள மகாமூடத்தனமான செயல்கள் மட்டுமல்ல. பிறையைக் கண்ணால் கண்டுதான் நோன்பையும், ஹஜ்ஜையும் ஆரம்பிக்க வேண்டும் என்று முழுச்சமுதாயமும் கொண்டிருக்கும் அறிவுக்குப் புறம்பான மூட நம்பிக்கைகளும் உண்டு. வாழ்வின் மற்ற அனைத்து விஷயங்களிலும் விஞ்ஞான முன்னேற்றத்தையும், நவீன சாதனங்களையும் பயன்படுத்திப் பலனடையும் இவர்கள் மார்க்க விஷயங்களில் மட்டும் அதைப் பயன்படுத்தமாட்டோம், அன்று நபி செய்ததாக எது எங்களுக்குக் கூறப்படுகிறதோ, அதுவும் குறிப்பாக நிலவின் விஷயத்தில் அடம்பிடிப்பது விந்தையான ஒன்றே! அவர்களுடைய மொழிபெயர்ப்புக்கேற்ப, இப்படி ஒரு விபரீதத் தொடர்பை இவ்வசனத்தின் கருத்துக்களுக்கு அவர்கள் உருவாக்கி வைத்திருந்தாலும் உண்மையில் அவ்வசனத்தின் கருத்துக்களுக்குள் உள்ள முன்பின் தொடர்பை (Context) நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது அறிந்து கொள்ள முடியும்.

இஸ்லாம் (இறைவனுக்கு அடிபணிதல்) என்னும் மார்க்கம் இன்றைய நிலையைப் போலவே முஹம்மத் நபியின் காலத்திலும் சிதைக்கப்பட்டிருப்பதாலும் நிலை நாட்டப் பட்ட ஒன்றாக இருந்தது என்பதை இப்போது நாம் குர்ஆனின் மூலமாக அறிந்து கொண்டிருக்

கின்றோம். இன்றைய தொழுகை, நோன்பு, ஸக்காத் தர்மம் புனித மாதங்கள், ஹஜ் ஆகியவை முஹம்மத் நபியின் காலத்திற்கு முன்னரே புழக்கத்தில் இருந்தன என்று தெரிந்து கொண்டிருக் கின்றோம். சரித்திரத்திலும் இதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. அவர்கள் நிலவின் பல்வேறு நிலைகளை கொண்டே காலத் தையும் கணித்து வந்தனர்.

அவர்கள் நன்கறிந்த ஒன்றை நபியிடம் வந்து ஏன் ஒரு கேள்வியாகக் கேட்கவேண்டும்? கூறப்பட்ட பதிலும் அவர்கள் அறியாத ஒன்றல்ல. அதில் புதிதாக எதுவும் இல்லை . எனில், அவர்கள் நபியிடம் இக்கேள்வியைக் கேட்டதில் அவர்களுக்கு வேறு ஏதேனும் கீழான நோக்கங்கள் இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவு அல்லவா? அவர்கள் சுற்றி வளைத்து வேறு எதையோ கேட்க வருகின்றார்கள். இறைவன் அவர்கள் சுற்றி வளைத்துக் கேட்ட கேள்விக்கு இடம் கொடுக்காமல் கேள்விக்குரிய பதிலை மட்டும் நேரடியாகக் கூறிவிட்டுத் தொடர்ந்து சுற்றி வளைத்துப் பேசுவதில், காரியங்கள் செய்வதில் எந்த நன்மையும் இல்லை மாறாக இறைவனுக்குக் கீழ்படிவதிலும், நல்லவராக இருப்பதுமே நன்மை ஆகும் என்று தெளிவு செய்கிறார், என்று நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

ரஷாத் இவ்வசனத்திற்குரிய தன்னுடைய அடிக்குறிப்பில், "மூலத்தில் உள்ள பழமொழி 'உங்கள் வீடுகளில் பின்புறக் கதவின் வழியாக உள்ளே நுழையாதீர்கள்' என்று கூறுகிறது. நிலவின் பட்சங்களைப் பற்றிய கேள்வி சுற்றிவளைத்துப் பேசுவதற்குரிய ஓர் உதாரணமாகும் (beating around the bush) இக்கேள்விக்குப் பின்னர் கீழான நோக்கங்கள் இருந்தன”, என்று கூறுகிறார்.

குர்ஆனில் இருந்து ரஷாத் பெற்ற இந்தக் கருத்து. குர்ஆனின் அடிப்படையில் மிகச் சரியான ஒன்றே என்பதை இவ்வசனத்தை நாம் ஆழ்ந்து சிந்தித்தால் அறிந்து கொள்ள முடியும். ✣ ✣ ✣

# கற்பு

மேலும் அவர்கள் தங்களின் கற்பைக் பேணுவார்கள். தாங்கள் (கைபிடித்தபின்) கணவன் அல்லது மனைவியிடம் மட்டுமோ, அல்லது தாங்கள் கைபிடித்தவர்களிடம் மட்டுமோ, அவர்கள் பாலுறவு வைப்பார்கள்; இத்தகையோர் பழிக்கப்படலாகாது (23:5-6)

இறைவனின் சட்டத்தைப் பின்பற்றுவதிலும் தங்களின் கற்பைப் பாதுகாப்பதிலுமே அவர்களுக்கு வாழ்க்கை முழுவதும் மனமகிழ்ச்சி உண்டென்பதை ஒவ்வொரு உண்மை நம்பிக்கையாளர்களும் தங்களின் மகன்களுக்கும், மகள்களுக்கும் போதிக்க வேண்டும். இதற்கு அர்த்தம், அவர்கள் தங்களின் வருங்கால கணவன் அல்லது மனைவிக்கென மட்டும் தங்களை தூய்மையாக வைத்திருந்து பாலுறவு ரீதியாக தன்னை எவரும் அணுக அனுமதிக்காமலிருப்பதேயாகும்.

(23:5-6, 24:30, 33:35, 70:20-70)

இன்றைய சமுதாயம் ஓங்கிய காம உணர்வுகளால் மித மிஞ்சிப் போயுள்ளது. எண்பதுகளில் உள்ள அமெரிக்க சமுதாயத்தில் (கட்டுரை முன்பு எழுதப்பட்டது) பெற்றோர்களே, தங்களின் பெண் பிள்ளைகளுக்கு ஆண் நண்பர்களையும், ஆண் பிள்ளை களுக்கு பெண் பிள்ளை களையும் இணைத்துப் பேச ஆரம்பித்து விட்டனர். அவர்கள் பருவ வயதை தொட்டதும் அநேக பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளுக்கு கற்பத் தடுப்பு உபகரணங்களை அவர்களே விநியோகம் செய்கின்றனர். எவ்வித உளவியல் முதிர்ச்சியோ, ஒழுக்க வரையரைகளோ இல்லாமல் இருந்தும் பாலுறவு ரீதியாக சுறுசுறுப்பான செயல்திறன் கொண்ட இளவயதினர் சதவீதத்தில் பெருகி விட்டனர்.

எண்ணற்ற, சட்டத்திற்கு புறம்பான கர்ப்பந்தரித்தல்கள், அதோடு சேர்ந்து வரும் துன்பமும் துயரமுமான அனுபவங்கள், கூட எண்ணற்ற துயரம் நிறைந்த சிசுக்கொலைகள், ஒவ்வொரு மாதமும் அமெரிக்காவில் (உலகெங்கும்) நிகழ்கின்றன. இந்த

ஒழுக்கம் தவறிய உணர்ச்சித் தடுமாற்றங்களின் விளைவுகளுள் உட்பட்டவை: தேவையில்லாததும், துணை செய்யப்படாததும் ஆன குழந்தைகள், குற்றமிழைத்த, கடமை தவறிய, மேலும் பொறுப்பற்ற தந்தைகள், மக்களின் உயிரையோ, சொத்துக்களையோ, மதிக்காத குற்றவாளிகள், எண்ணற்ற தகுதியில்லாத சமுதாய விரோதி, குணப்படுத்த முடியாத தோல் அழற்சிகள், குணப்படுத்த முடியா பாலுண்ணிகள், நாசம் செய்யும் சிபிலிஸ், கோனோரியா, டிஸ்ப்னாசியா, கொலைகார எய்ட்ஸ், மேலும் இதற்கு முன்பு அறிந்தே இராத புதிய புதிய நோய்கள்.

பெரும்பாலான மக்கள் அறியாதிருப்பது என்னவென்றால், இந்த ஒழுக்கம் தவறிய உணர்ச்சித் தடுமாற்றங்கள் தான் அவர்களின் வாழ்க்கை முழுவதும் பெருங்கேட்டைக் கொண்டு வருகின்றன. ஏனெனில் இந்த உலகை ஆளும் ஒரே சட்டம் இறைவனின் சட்டமே. மேலும் இறைவனின் சட்டத்தை நன்கு தெரிந்தே மீறும் இச்செயல்கள்தான்.

தங்கள் குழந்தைகளின் மீதும் அக்கறையுடன்,உண்மை நம்பிக்கையாளர்கள் திரும்பத் திரும்ப, விடாமல் அவர்களின் கற்பைப் பேணிக் கொள்ளும்படி உபதேசிப்பார்கள்.(20:132) அவர்களுக்கு ஞாபகமூட்டிக் கொண்டிருப்பார்கள். அவர்களின் சொந்த நலனுக்காகவும் நிம்மதிக்காகவுமே அவர்கள் கற்புடன் இருப்பதும், அதன் பிறகு தனது கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ துரோகமிழைக்காமல் விபச்சாரத்தில் ஈடுபடாமல் இருப்பதும் என்பதை புரியவைப்பதுதான் இதற்கு அர்த்தம். திருணத்திற்கு முன்னும் பின்னும் நம் கற்பைப் பேணச் சொல்லும் இறைவனின் அறிவுரை நமது சொந்த நலனுக்கே! இறைவனே நம்முடைய உடல் நலத்தையும், பொருள் வளத்தையும், மகிழ்ச்சி அல்லது துயரத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் (53:43,48) அவரே உங்களை சிரிக்க அல்லது அழச் செய்கிறவர்; அவரே உங்களை செல்வந்தர் ஆக அல்லது ஏழையாக ஆக்குகிறவர். (53:43048)

**(ரஷாத் கலீஃபாவின் குர்ஆன் ஆங்கில மொழிபெயர்ப்பின் அனுபந்தம் 34லிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டது.)**

# நேருக்கு நேர்



சென்ற செப்டம்பர் மாத இதழின் தொடர்ச்சி

**பள்ளிக்கூடத்தில் ஒன்றாக படித்த பால்ய நண்பர்கள் மன்சூரும், அப்துல் ரஹீமும் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தங்களது 35வது வயதில் ஐந்தாவது முறையாக சந்தித்து உரையாடுகின்றனர். அல்லாஹ்வுக்கு பொருத்தமாகவும் சக மனிதர்களுக்கு உதவியாகவும் வாழ வேண்டும் என்பதை சிறு வயது முதல் லட்சியமாக கொண்டவர்கள்.**

**அப்துல் ரஹீம் ஆலிம் :**

அஸ்ஸலாமு அலைக்கும். இம்முறை என்னுடன் பஷீர் ஆலிம் அவர்கள் கூட வந்துள்ளார்கள். அவர்கள் நடுநிலை யாளர், அறிவாளி, உண்மையை யார் சொன்னாலும் ஏற்றுக் கொள்ளும் நல்ல மனிதர்.

**மன்சூர்**

ஸலாமுன் அலைக்கும். வாங்க, வாங்க, தங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

**பஷீர் ஆலிம் :**

முதலில் என்னைப் பற்றி கூறிவிடுகிறேன். நான் ரொம்ப கண்டிப்பானவன். எனக்கு நிறைய விளக்கங்கள் ஏற்கனவே தெரியும். அதனால் சுருக்கமாக ஆனால் ஆதாரத்துடன் ஒவ்வொன்றையும் பேசிக்கொண்டால் நல்லது.

**மன்சூர் :** சுருக்கமாக பேசுவதையே நானும் விரும்புகிறேன். குர்ஆன் மட்டும் போதும், ஹதீஸ்கள் தேவையில்லை என்ற எங்களது கொள்கையைப் பற்றிப் பேசத்தானே வந்துள்ளீர்கள். முதலில் நீங்கள் கேளுங்கள். பிறகு நான் சிலவற்றை கேட்க அனுமதியுங்கள்.

**பஷீர் ஆலிம் :** சரி நானே ஆரம்பிக்கிறேன். ஹதீஸை புறக்கணிப்பது நபியை புறக்கணிப்பது ஆகாதா!?

**<u>மன்சூர்</u>** : நிச்சயமாக ஆகாது. இறுதி நபி முகம்மது ரஸுலுல்லா என்பதில் மாற்றுக் கருத்து ஒரு போதும் இல்லை. நபியின் பெயரால் பொய்யான விஷயங்களை இட்டுக்கட்டி வைத்திருக்கும் ஹதீஸ்களைத்தான் மறுக்கிறோம்.

**<u>பஷீர் ஆலிம்</u>** : முகம்மது நபி வாயினால் கூறிய குர்ஆனை ஏற்றுக் கொள்கிறீர்கள்! ஆனால் நபி வாயினால் கூறிய ஹதீஸ்களை எப்படி ஏற்க மறுக்கிறிர்கள்...?

**<u>மன்சூர்</u>** : குர்ஆனுக்கு எதிரான மாற்றமான கருத்துக்களை முழுக்க முழுக்க கொண்டுள்ள ஹதீஸ்கள் ஒருபோதும் முகம்மது நபியின் கூற்றாக இருக்க இயலாது. நபி இறந்து சுமார் 200 வருடங்கள் வரை ஹதீஸ்கள் ஏற்படுத்தப்படவே இல்லை .

**<u>பஷீர் ஆலிம்</u>** : பெற்ற தாய் இவர்தான் உன் தந்தை என்று யாரைக் காட்டுகிறாளோ அவரைத் தந்தை என்று நம்புகிறோம். அதுபோல் நபியவர்கள் குர்ஆனையும், ஹதீஸையும் கொடுத்து பின்பற்றச் சொன்னால் குர்ஆனை ஏற்போம். ஹதீஸை மறுப்போம் என்பது எப்படி சரி என்கிறீர்கள்?

மேலும் குர்ஆன் வலியுறுத்தாத அரபிய சின்னங்கள் இவை, நபியைப்போல் பாவணை செய்வதை விட்டொழித்து நபி நடந்து காட்டிய குர்ஆனின் வழியில் நடக்க முனைவோம்.

**மன்சூர்** : மன்னிக்கவும், உங்கள் உதாரணம் பொருந்தாது, நபி தாயும் அல்ல, அல்லாஹ் தந்தையுமல்ல, மேலும் இறைவன் தான் குர்ஆனை இறக்கி வைத்து முகம்மது என்ற மனிதர் அவருடைய தூதர் என்றும் இறுதி நபி என்றும் உலகுக்கு அறிமுகம் செய்து வைக்கிறார். நபியை உலகுக்கு அறிமுகம் செய்வது குர்ஆன்தான். மனிதர்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து தூதராக்கி அவர் மூலம் வேதத்தை மனிதர்களுக்கு வெளிப் படுத்துவதுதான் அல்லாஹ்வின் சுன்னத்தாக இருக்கிறது என்ற வசனம் தாங்கள் அறிந்ததுதானே.

**பஷீர் ஆலிம்** : உங்களது வாதம் புதுமையாக இருக்கிறது! சரி சிந்திப்போம். உங்களை இலேசாக எடைபோட்டு வந்தேன். நீங்கள் விபரமாக பதில் சொல்லக்கூடும் என்பதால் சில கனமான கேள்விகளை வைக்கிறேன். உண்மையை அறிய எனது மனம் திறந்தே இருக்கிறது. முதலில் குர்ஆனுக்கு முரணான ஒன்றிரண்டு ஹதீஸ்களைக் கூறுங்களேன்.

**மன்சூர்** : **"அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள். மேலும் தூதருக்குக் கட்டுப்படுங்கள்''** என்ற வசனத்திற்கு ஹதீஸ்களின் விளக்கம் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவது என்பது குர்ஆன்படி நடப்பதாகும் என்றும் தூதருக்குக் கட்டுப்படுவது என்பது முகம்மது நபி சொன்னதாகக் கூறப்படும் ஹதீஸ்களின் படி நடப்பதுமாகும் என்றும் வலியுறுத்துகின்றன. இக்கருத்து குர்ஆனுக்கு முரணானதாகும்.

**பஷீர் ஆலிம்** : இதில் என்ன குர்ஆனுக்கு முரணான கருத்து இருக்கிறது.?

**மன்சூர்** : குர்ஆனை முழுமையாக அணுகிப் பார்ப்போமானால் தூதரைப் பின்பற்றுங்கள் என்றுதான் உள்ளதே தவிர முகம்மது நபியை பின்பற்றுங்கள் என்று குர்ஆனில் எங்கும் குறிப்பிடப்படவில்லை .

நபி உயிருடன் இருக்கும் காலம் வரை சிறிது சிறிதாக இறைச் செய்தியை பெற்றுக் கொண்டிருக்கும் தூதர் முகம்மதை பின்பற்றும்படியும், அவர் மரணத்திற்குப் பின், கியாம நாள் வரை உயிருள்ள தூதராக இருந்து வழிகாட்டக்கூடிய, முழுமை பெற்ற இறைச் செய்தியான குர்ஆனை பின்பற்ற வேண்டும் என்பதுதான் சரியான ஒன்றாகும்.

**பஷீர் ஆலிம்** : இதுவும் புதுமையான விளக்கமாக இருக்கிறது! வசன ஆதாரம் கொடுக்க முடியுமா?

**மன்சூர்** : நிச்சயமாக! தரலாம்.

1. வசனம் 35:14 "**உயிருள்ள வர்களுக்கும், மரித் தவர்களுக்கும் இடையில் நான் ஒரு திரையை இட்டி ருக்கிறோம். அவர்கள் பார்க்க மாட்டார்கள், கேட்க மாட்டார்கள்**"

இந்த வசனம் மரணித்து விட்ட முகம்மது நபிக்கும் சேர்த்துத்தான் என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான்

2. வசனம் 3:101 "**நம்முடைய தூதர் உங்களுடனேயே இருந்து அவர் உங்களை நல்வழிப்படுத்திக் கொண்டே இருக்கின்றார்**" என்று கூறுகிறது.

எப்பொழுதும் நம்முட னேயே இருந்து கொண்டு வழிகாட்ட மரணித்துவிட்ட தூதர் முகம்மதுவால் இயலாது என்பது வசனம் 35:14க் கொண்டு அறிந்து கொள்கிறோம்

எக்காலத்திற்கும் பொருந்தக் கூடியது இறை வசனங்கள். நபி மரணித்துவிட்ட பின்னர், கடந்து விட்டசுமார்1400 வருடங்களாகவும், இனிவரும் கியாமநாள் வரை உள்ள காலத்திற்கும், நம்மிடையே இருந்து கொண்டு நம்மை நல்வழிப்படுத்தும் தூதர் இறைவனின் தூதுச் செய்தியான குர்ஆன் என்னும் தூதர் தவிர வேறு யாராக இருக்க முடியும்.

**பஷீர் ஆலிம்** : சரி, வேறு முரண்பாடுகள் என்னென்ன! சுருக்கமாகக் கூறுங்கள்.

**மன்சூர்**:

**1. குர்ஆனில் இல்லாத அத்தஹியத்து**

**2. குர்ஆனில் இல்லாத கப்ரு வேதனை**

**3. குர்ஆனில் இல்லாத ஷஹாதத்**

**4. குர்ஆனில் இல்லாத சுன்னத், நபிள் தொழுகைகள்**

**5. குர்ஆனில் இல்லாத முகம்மது நபியின் பரிந்துரை**

**6. குர்ஆனில் இல்லாத ஒற்றைக்கண் அசுரன் தஜ்ஜால்**

**7. குர்ஆனில் இல்லாத ஆமீன் என்ற சொல்**

**8. குர்ஆனில் இல்லாத தொப்பி, தாடி, அங்கி ஆகிய மார்க்க அடையாளங்கள்.**

இன்னும் நிறையவே இருக்கிறது. பட்டியலிடட்டுமா?

அப்படிப்பட்ட சத்தியம் தவறாத நீதிமான், விசாரணை நாளுக்கு முன்னர், மனிதர்கள் இறந்த உடனே இடைப்பட்ட கப்ரு நிலையில் வேதனை செய்வார், தண்டிப்பார் என்பது அல்லாஹ்வின் வாக்குறுதிக்கு மாறானது, இல்லையா? நரக வேதனைக்கு முன் ஒரு வேதனையா? விசாரிக்காமல் தண்டனையா?

# திருத்தம்

சென்ற இதழின் குர்ஆன் மொழிபெயர்ப்பில் வசனம் 124‘ சில குறிப்பிட்ட கட்டளைகள் மூலம் இப்றாஹீம் அவருடைய இரட்சகரால் சோதிக்கப்பட்டதை நினைவு கூறுங்கள், அவர் அவற்றை நிறைவேற்றினார் (இறைவன்) கூறினார், “நான் உம்மை மனிதர்களுக்கு ஓர் இமாமாக நியமிக்கிறேன் ; "அவர் கூறினார், என்னுடைய சந்ததியினருமா?” அவர் கூறினார். என்னுடைய உறுதிமொழியில் வரம்பு மீறியவர்கள் உட்பட மாட்டார்கள்; என்று அச்சாகி இருக்க வேண்டும். தவறுதலாக அடிக்கோடிட்ட வாக்கியம் விடுபட்டு விட்டதற்கு வருந்துகிறோம். சேர்த்து படித்துக் கொள்ளவும்.

<u>பஷீர் ஆலிம்</u> : நீங்கள் கூறிய எட்டு விஷயங்கள் இஸ்லாத்தையே குறை கூறுவது போல் இருக்கிறது. நான் உங்களை சும்மா விடமாட்டேன். ஒவ்வொன்றுக்கும் மிகச் சுருக்கமாக ஆதாரம் மற்றும் விளக்கம் கொடுக்க வேண்டும். முதல் விஷயம் அத்தஹீயத்து! குர்ஆனில் இல்லைதான். அதனால் இஸ்லாத்திற்கு என்ன பங்கம் ஏற்பட்டுவிட்டது. ஷிர்க் செய்து விட்டோமா என்ன?

<u>மன்சூர்</u> : ஆம், ஷிர்க் தான்! **உங்களது தொழுகையில் நீங்கள் அல்லாஹ்வை தவிர வேறு எவரையும் அழைக்காதீர்கள்.** (வசனம் 72:18, 20:14)

அல்லாஹ்வை மட்டும் தனித்து வணங்க வேண்டிய தொழுகையில் அத்தஹியத்தில் துவா என்ற காரணம் கூறி இபுறாஹிம் நபி, முகம்மது நபி, ஆகியோரை பெயர் குறிப்பிட்டு தொழுகையை களங்கம் செய்து விடுகிறோம்.

மேலும் முகம்மது நபிக்கு தொழுகை நிலையிலேயே ஸலாமும் கூறி ஓர்மையான இறை வணக்கத்திற்கு பங்கம் உண்டாக்கி விடுகிறோம்.

<u>பஷீர் ஆலிம்</u> : அவர்களுக்காக பிரார்த்தனைதான் செய்கிறோம். சரி....... சிந்திப்போம்.

கப்ரு வேதனைப்பற்றி குர்ஆனில் இல்லை என்பதற்கு ஆதாரம், விளக்கம் கொடுங்கள்.

<u>மன்சூர்</u> : குர்ஆனில் இல்லவே இல்லை. கப்ரு வேதனை இருக்கிறதன்றால் நீங்கள் தான் வசன ஆதாரம் தர வேண்டும்.

அல்லாஹ் நீதிமான், சத்தியம் தவறாதவர், மறுமையில் அனைவரையும் விசாரணை செய்து தீர்ப்பளிப்பவர், நல்லவர்களுக்கு மன்னிப்பும், சொர்க்கமும், தீயவர்களுக்கு தண்டனையும் கொடுப்பவர். இவை அல்லாஹ்வின் வாக்குறுதிகள்.

அப்படிப்பட்ட சத்தியம் தவறாத நீதிமான், விசாரணை நாளுக்கு முன்னர், மனிதர்கள் இறந்த உடனே இடைப்பட்ட கப்ரு நிலையில் வேதனை செய்வார், தண்டிப்பார் என்பது அல்லாஹ்வின் வாக்குறுதிக்கு மாறானது, இல்லையா? நரக வேதனைக்கு முன் ஒரு வேதனையா? விசாரிக்காமல் தண்டனையா?

<u>பஷீர் ஆலிம்</u>: கப்ரில் உள்ள குற்றவாளிகளுக்கு காலையிலும் மாலையிலும் நரகம் காட்டப்படும் என்று வசனம் கூறுகிறதே?

**<u>மன்சூர்</u>** : நரகம் இன்னும் படைக்கப்படவில்லை என்பதும் அதன் எரிபொருள் தீய மனிதர்களும் கற்களும் என்பதும் தாங்கள் அறியாததல்ல. நரகத்தின் காட்சி அவர்களுக்குக் காட்டப்படும் என்பது வேதனை செய்வதாக ஆகுமா?

**<u>பஷீர் ஆலிம்</u>** : அடுத்து...... அது என்ன குர்ஆனின் இல்லாத ஷஹாதத்!?

**"லாயிலாஹ இல்லல்லாஹ் முகம்மது ரசூலுல்லாஹ்" என்ற கலிமா குர்ஆனில் இல்லையா?**
**மன்சூர் : அனைத்துத் தூதர்களையும் "லாயிலாஹ இல்லல்லாஹ்' என்ற அடிப் படையான செய்தியையே மனிதர்களுக்கு போதிக்குமாறு ஏவினோம். வசனம் (21:25)**

குர்ஆனில் எந்தவொரு இடத்திலும் "லாயிலாஹ இல்லல்லா"வுடன் முகம்மது ரசூலுல்லா என்ற வார்த்தை இணைத்துக் கூறப்பட்டு இருக்காது.

மனிதர்கள்தான் இரண்டையும் இணைத்து, இறைவனுடன் இணைத்துக் கூறிவிடுகின்றனர். மேலோட்டமாக பார்த்தால் அல்லாவின் தூதர் முகம்மது என்பதில் என்ன குறையைக் காண்கிறார்கள் என நினைக்கத் தோன்றும். ஆனால்

குர்ஆன் கூறாத ஒன்று இது. மேலும் இணைவைப்பும் ஆகும். நபிமார்களிடம் பேதம் பாராட்டுவதும் ஆகும். தயவு செய்து சிந்தியுங்கள்.

முகம்மது நபிக்கு முன்னர் வாழ்ந்த எந்தவொரு தூதராவது "லாயிலாஹ இல்லல்லாஹ்" சேர்த்து தன்னையும் இணைத்துக் கூறியதாக வரலாறு ஏதேனும் உண்டா ? குர்ஆனும் அவ்வாறு கூறவில்லை. நபியும் அவ்வாறு ஒருபோதும் கூறியிருக்கமாட்டார்.

**லாயிலாஹ இல்லல்லாஹ் இபுராஹிம் ரஸுலுல்லாஹ்**

**லாயிலாஹ இல்லல்லாஹ் மூஸா ரஸுலுல்லாஹ்**

**லாயிலாஹ இல்லல்லாஹ் ஈஸா ரஸுலுல்லாஹ்**

என்று இல்லாத பட்சத்தில் முகம்மது நபியை மட்டும் இணைத்துக் கூறி பேதம் பாராட்டக் கூடாது. இறைவசனத்திற்கு மாறு செய்யக் கூடாது.

**<u>பஷீர் ஆலிம்</u>** : சரி.... சுன்னத், நபின் தொழுகை இல்லை என்பது பற்றி ஆதாரம்.?

**<u>மன்சூர்</u>** : 5 நேரத் தொழுகை தவிர எந்தத் தொழுகைக்கும் குர்ஆனில் வசன க ஆதாரம் இல்லை, இருக்குமானால் நீங்கள் காட்டலாம்.

(1) பஜ்ர் 11 : 114, 24:58,
(2) லுஹர் : 17:78
(3) அஸர் : 2:238
(4) மஃரிப் 11:114
(5) இஸா 24:58

**<u>பஷீர்ஆலிம்</u>** : அதிகமதிகம், இறைவனை வணங்க வேண்டும் என்று குர்ஆனில் பல வசனங்களை காட்டட்டுமா?

**<u>மன்சூர்</u>** : மன்னிக்கவும், தொழுகை வேறு, வணக்கம் வேறு, வணக்கம் என்றால் கீழ்படிதல், பணிந்து நடத்தல், என்றுதான் பொருளாகும். அதிகம் அதிகம் தொழவேண்டும் என்று குர்ஆன் கூறவில்லை. குர்ஆனில் இறைவன் கூறியுள்ள அனைத்துக் கட்டளைகளுக்கும் கீழ்படிந்து நடக்க வேண்டும் என்பது தான் வணங்குதல் ஆகும் வசனம். 98:5 பாருங்கள்

**<u>பஷீர் ஆலிம்</u>** : குர்ஆனில் இல்லாத முகம்மது நபியின் பரிந்துரை! என்று கூறிகிறீர்கள். ஆனால், **தான் அனுமதித்தோரைத் தவிர** யார்தான் அவரிடம் பரிந்துரைக்க முடியும் என்ற வசனம் 2:255ல் கூறப்பட்டுள்ளதே?

**<u>மன்சூர்</u>** : குர்ஆன் முழுக்க பற்பல வசனங்க ளில் (2:48, 123, 254; 3:51, 70, 94; 39:3) **பரிந்துரையே கிடையாது** என்றும், **பரிந்துரையோ, பகரமோ இல்லாத அந்த நாளில்** (2:254) **என்றும்** வலியுறுத்தி இறைவன் கூறியிருக்க மேற்படி வசனத்திற்கு எதிர்மறையான அர்த்தத்தை ஏன் உருவாக்கு கிறீர்கள்? பரிந்துரைக்கு அனுமதியே இல்லை என்றுதானே அர்த்தம் வரும். முகம்மது நபி பரிந்துரைப்பார் என்று எங்கு கூறப்பட்டுள்ளது? நீங்கள் வசன ஆதாரம் கொடுங்கள்.

**<u>பஷீர் ஆலிம்</u>** : சரி சகோதரரே, குர்ஆனில் இல்லாத **ஆமின்** என்ற வார்த்தை **தொப்பி, தாடி, உடலை மூடும் அங்கி** இவை பற்றியும் கூறிவிடுங்கள்.

**<u>மன்சூர்</u>** : ஆமீன் என்ற வார்த்தை அரபியே அல்ல. கூறும்படி ஏவப்படவும் இல்லை . கூறும்படி நிர்பந்திப்பது தவறாகும்.

தொப்பி, தாடி, உடலை மூடும் அங்கி இவைகள் அரபிக் கலாச்சாரங்களாகும். இஸ்லாமிய கலாச்சாரங்கள் அல்ல.

அகில உலக மார்க்கமான இறுதி நாள் வரை நிலைத்திருக்கும் மார்க்கமான இஸ்லாத்திற்கு தனிப்பட்ட இத்தகைய கலாச்சார சின்னங்கள் ஒரு போதும் பொருத்தமற்றது. இஸ்லாமிய கொள்கை மீது ஈடுபாடு ஏற்படுபவர்களுக்கு கூட, தாடி, தொப்பி, அங்கியைக் கண்டால் தயக்கம்தான் ஏற்படும்.

மேலும் குர்ஆன் வலியுறுத்தாத அரபிய சின்னங்கள் இவை, **நபியைப் போல் பாவனை செய்வதை விட்டொழித்து நபி நடந்து காட்டிய குர்ஆனின் வழியில் நடக்க முனைவோம்.**

<u>பஷீர் ஆலிம்</u> : கடைசியாக ஒற்றைக்கண் அசுரன் “தஜ்ஜால்” பற்றி ஒரு சிறு குறிப்புக் கூட குர்ஆனில் இல்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன். குர்ஆனோடு ஒத்துப்போகக் கூடிய நிறைய ஹதீஸ்கள் இருக்கின்றன. அவற்றை நீங்கள் ஏற்கலாம் அல்லவா?

<u>மன்சூர்</u> : உண்மையும், பொய்யும், கலந்ததை, மேலும் முரண்பாடுகள் கொண்டதை, மனிதர்கள் இட்டுக்கட்டிய ஹதீஸ்களைக் காட்டிலும் முரண்பாடே இல்லாத, சத்தியமான, இறைவனின்

**தொப்பி,**

**தாடி,**

**உடலை மூடும்**

**அங்கி**

**இவைகள்**

**அரபிக்**

**கலாச்சாரங்களாகும்.**

வார்த்தைகளை பட்டும் ஏற்பதுதான் அறிவுடைமை என்று நம்புகிறேன். இறைவன் நம்மை நேர்வழியில் செலுத்தட்டும்.

<u>பஷீர் ஆலிம்</u> : ஆம்..... இறைவன் நேர்வழி காட்டட்டும். சிந்திப்போம்

<u>அ.ரஹீம் ஆலிம்</u> : மீண்டும் சந்திப்போம். அஸ்ஸலாமு அலைக்கும்.

<u>மன்சூர்</u> : நீங்கள் மனம் திறந்து கேட்டமைக்கு நன்றி. மீண்டும் சந்திப் போடம், ஸலாமுன் அலைக்கும்.

***

குர்ஆன் ஆய்வு மைய வெளியீடுகள்

முஸ்லிம்களுக்கு

# 19

# கேள்விகள்

**இன்றைய முஸ்லிம்களின் தவறான பாரம்பரிய நடைமுறைகளை சுட்டிக்காட்டி சரியான இஸ்லாத்தின் (அடிபணிதல்) பக்கம் அனைத்து மக்களையும் புதிய சகாப்தத்தை நோக்கி அழைக்கிறது**

## அறிவிப்பு

ரஷாத் கலிபாவின் ஜும்மா பயான்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும். ரஷாத் கலீபாவின் குர்ஆன் வகுப்பு ஆடியோ தமிழ், ஆங்கிலம், உருது, குர்ஆன் ஆடியோ. குர்ஆன் மட்டுமே மார்க்கம் ஹதீஸ்கள் மார்க்கம் அல்ல என்பது பற்றி தெளிவான குர்ஆன் வசனங்கள் கூடிய ஜும்மா பயான்கள், குர்ஆன் ஹதீஸ் இஸ்லாம் புத்தகம், முஸ்லிம்களுக்கு 19 கேள்விகள் புத்தகம், **புதிய நினைவூட்டல்** புத்தகங்கள் கிடைக்கும். மிகக் குறைந்த விலையில் ஆங்கிலம், தமிழ், குர்ஆன் Amazon, Flipkart மூலியமாக கிடைக்கும்.
www.kadavulmattum.org

**அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய இறைவனின் திருப்பெயரால்**

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கிணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங்களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக்குள்ளேயே கொண்டதாக இருக்கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணிதல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

ஓர் உலகம்
ஓர்-இறை
ஒரே செய்தி

Book - Post

To

*If undelivered Please return to*

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662